# கல்லூரி ஆண்டு மலர்

## 2016 - 2017










# சிக்கண்ணா அரசு கலைக்கல்லூரி

(Affiliated to Bharathiar University, Coimbatore)

Re-accredited with B Grade by NAAC

திருப்பூர் - 641 602, தமிழ்நாடு.

ESTD : 1966

# சிக்கண்ணா அரசு கலைக்கல்லூரி

பாரதியார் பல்கலைக்கழக இணைவு பெற்றது.

Re Accredited at "B" grade by NAAC

திருப்பூர் - 641 602, தமிழ்நாடு.



# கல்லூரி ஆண்டு மலர்

## 2016 - 2017

**பதிப்பாசிரியர் :**

முனைவர் **கு. சண்முகசுந்தரம்** M.Com., M.Phil, Ph.D.
முதல்வர்

**ஆசிரியர் :**

முனைவர் **நா. பாலசுப்பிரமணியன்** M.A., M.Phil, Ph.D.
உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர், தமிழ்த்துறை

**ஆசிரியர் குழு**

திரு. **இரா. செங்கமுத்து** M.A.
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை

முனைவர் **சா. பர்வின்பானு** M.A., M.Phil, Ph.D.
உதவிப் பேராசிரியர், ஆங்கிலத்துறை

முனைவர் **வா.சீ. மீனாட்சி** M.C.A.,M.Phil, Ph.D.
உதவிப் பேராசிரியர், கணினி அறிவியல் துறை

திருமதி **த. சுதா** M.C.A.,M.Phil.
உதவிப் பேராசிரியர், கணினி பயன்பாட்டியல் துறை

---

**சிக்கண்ணா அரசு கலைக்கல்லூரி**
கல்லூரி சாலை, திருப்பூர் - 641 602, தமிழ்நாடு.
தொலைபேசி : **: 0421 - 2242152**
தொலை நகல் : **0421 - 2246600**
மின்னஞ்சல் : **principal@cgac.in**
இணையத்தளம் : **Web : www.cgac.in**



# மலர் முகம்


**திருப்பூர், சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரியின்**
**ஆண்டு மலர் 2016 - 2017 இப்பொழுது உங்கள் கைகளில்.**

இக்கல்வியாண்டில் நாள்தோறும் பல்வேறு நிகழ்வுகள் நடந்துள்ளன. அவற்றுள் சிலவற்றை, துறை வாரியாகத் தொகுத்து வழங்கியுள்ளோம். கல்லூரியின் சிறப்பான அன்றாட செயல்பாடுகளுக்கு இம்மலரே சாட்சி.

ஆசிரியர், மாணவ, மாணவியரின் படைப்புகளும் இம்மலரில் இடம் பெற்றுள்ளன. அவற்றில் இன்றைய சமூக நிலையையும், எதிர்காலக் கனவுகளையும் காண முடிகிறது.

இம்மலர் வெளிவரத் துணை நின்ற அத்துணை நல் இதயங்களுக்கும் நன்றி சொல்கின்றோம்.

இப்படிக்கு
**மலர்க்குழு**



# ஆண்டறிக்கை

## 2016 - 2017

கல்வியாண்டு



முனைவர் **கு.சண்முகசுந்தரம்**

எம்.காம்., எம்.ஃபில்., பிஎச்.டி.

முதல்வர்

வணக்கம்!

2016-2017ஆம் ஆண்டிற்கான கல்வியாண்டு அறிக்கையை உங்கள் முன் சமர்ப்பிப்பதிலே பெருமகிழ்ச்சியடைகிறேன்.

கடந்த 1966ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி 50வது ஆண்டு பொன்விழாவைக் கடந்து வந்திருக்கிறது. இந்த 50 ஆண்டு காலத்திலே இந்தக் கல்லூரி இந்த ஊருக்கு மட்டுமல்ல தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் வந்திருந்து கல்வி பயின்ற பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் வாழ்விலே ஒளியேற்றி வைத்திருக்கிறது.

இக்கல்லூரியில் 13 இளநிலைப் பட்ட வகுப்புகளும் 7 முதுநிலைப் பட்ட வகுப்புகளும் 7 ஆய்வுப் படிப்புகளும் 7 முனைவர் பட்ட வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன. மொத்தம் 3000 மாணவ - மாணவியர் பயின்று வருகின்றனர்.

இக்கல்வியாண்டு முழுவதும் ஒவ்வொரு நாளும் பல்வேறு நிகழ்வுகள் நடந்துள்ளன. அவற்றையெல்லாம் பட்டியலிடுவதற்குப் போதுமான கால அவகாசம் இல்லாத காரணத்தினால், துறை வாரியாக நடைபெற்ற ஒரு சில முக்கிய நிகழ்வுகளை மட்டுமே இங்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

### தமிழ்த்துறை

கடந்த சில ஆண்டுகள் வரை தமிழ் முதன்மைப் பாடமாக இருந்த நிலையில் தற்போது மொழிப் பாடமாக மட்டுமே உள்ளது. கடந்த 04.03.2017 அன்று தமிழ் மன்ற விழா நடைபெற்றது. இவ்விழாவில் அரச்சலூர் நவரசம் மகளிர் கலை அறிவியல் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ஐ.செல்வம் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு "வெளிச்சம் பரவட்டும்" என்ற தலைப்பிலே பேருரை நிகழ்த்தினார். கலை, இலக்கியம் தொடர்பான பல்வேறு போட்டிகளில் பயிற்சிகளும், வழிகாட்டுதல்களும் மாணவ, மாணவியர்க்கு இத்துறை சார்பில் அளிக்கப்படுகிறது. இதன் மூலமாக பல்வேறு கல்லூரிகளிலும், அமைப்புகளிலும் கலந்து கொண்டு பரிசு பெற்று வருகின்றனர்.

### ஆங்கிலத்துறை

21.02.2017 அன்று ஆங்கில மன்ற விழா நடைபெற்றது. இவ்விழாவின் சிறப்பு விருந்தினராக திரு.**கே.கணேஷ்** (B.T. Asst. in English, Govt. Hr.Sec.School, Seenapuram.) கலந்து கொண்டு மாணவர்களுக்கு Career Awarness என்ற தலைப்பில் உரையாற்றினார். பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இத்துறையைச் சார்ந்த **Dr.S.பர்வின்பானு** அவர்கள் JKK நடராஜா கலை அறிவியல் கல்லூரி குமாரபாளையத்தில் நடைபெற்ற ஆண்டுவிழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கு சிறப்புரையாற்றினார். இத்துறையைச்

சார்ந்த பேராசிரியர்கள் பல்வேறு ஆராய்ச்சிக் கட்டுரைகளை வாசித்தளித்தும், இதழ்களில் வெளியிட்டும், தேசிய அளவில் நடந்த கருத்தரங்குகளில் பங்கேற்றும் உள்ளனர். இரண்டாமாண்டு ஆங்கிலத்துறையைச் சார்ந்த மாணவர் மோகன்ராஜ் Indian Medical Association நடத்திய உயிர்த்துளி 2K16 என்ற நிகழ்ச்சியில் Folk Dance நடனமாடி இரண்டாம் பரிசினைப் பெற்றுள்ளார்.

**வரலாற்றுத்துறை**

170 மாணவ மாணவியர் பயின்று வரும் வரலாற்றுத்துறையில் கடந்த ஏப்ரல் 2016இல் நடைபெற்ற பருவத்தேர்வில் மூன்றாமாண்டு மாணவ மாணவியர்கள் 76% தேர்ச்சி பெற்று பட்டம் பெற்றனர். இதில் டி.மணிகண்டன் எனும் மாணவர் பல்கலைக்கழக அளவில் மூன்றாமிடம் பெற்று துறைக்கும் கல்லூரிக்கும் பெருமை சேர்த்தார். 01.07.2016 அன்று கோவை மாவட்டத்திலுள்ள தொல்லியல் இடங்களைப் பற்றி ஆய்வு செய்து வரும் முனைவர் பட்ட ஆய்வாளர் திரு. **எஸ்.பாரதிராஜ்** "Archaeology a Living Past" என்ற தலைப்பில் மாணவர்களுக்கு சிறப்புரையாற்றினார்.

வரலாற்றுத்துறையும், தமிழ்நாடு அரசு சுற்றுலாத்துறையும் இணைந்து உலக சுற்றுலா தின விழாவினை 27.09.2016 அன்று நடத்தியது. இவ்விழாவில் கோவை மண்டல உதவி சுற்றுலா அலுவலர் திரு.என்.அன்பரசு அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

21.02.2017 அன்று நடைபெற்ற வரலாற்று மன்ற விழாவில் மூத்த பத்திரிக்கையாளர் திரு.வி.முத்துசாமி அவர்கள் கலந்து கொண்டு இதழியல் வாய்ப்புகளும் சவால்களும் என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

**கணிதத்துறை**

இத்துறையில் இளங்கலை முதுகலை மற்றும் M.Phil., Ph.D ஆராய்ச்சி பட்ட வகுப்புகள் நடைபெறுகின்றன. இளங்கலையில் 183 மாணாக்கர்களும் முதுகலையில் 87 மாணாக்கர்களும் M.Phil., ஆராய்ச்சி பட்ட வகுப்பில் 5 மாணாக்கர்களும் என தற்போது 275 பேர் பயின்று வருகின்றனர்.

கடந்த பிப்ரவரி மாதம் 8ஆம் தேதி சசூரி கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற அனைத்து கல்லூரிகளுக்கு இடையிலான போட்டியில் (Inter Colligiate Meet) இத்துறையைச் சார்ந்த முதுகலை முதலாம் ஆண்டு மாணவர்கள் கலந்து கொண்டு Maths Quiz, Maths Sketching ஆகிய போட்டிகளில் முதல் மற்றும் இரண்டாம் பரிசுகளை வென்றுள்ளனர். இத்துறை சார்பாக கணித மன்ற விழாவானது கடந்த பிப்ரவரி 22ம் தேதி நமது கல்லூரி குமரன் அரங்கில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இத்துறை ஆராய்ச்சிப் பட்ட வகுப்பு மாணவர்கள் கோவை Dr.N.G.P கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற தேசிய அளவிலான கருத்தரங்கில் பங்கேற்றனர். இத்துறையில் ஆராய்ச்சிப் பட்ட வகுப்பில் (Ph.D)-ல் இந்தக் கல்வி ஆண்டில் முனைவர் பா.ராஜராஜேஸ்வரி அவர்களின் வழிகாட்டுதலில் 2 நபர்கள் முனைவர் பட்டம் (Ph.D) பெற்றுள்ளனர். மேலும் முனைவர் சு.குமரகுரு அவர்களின் வழிகாட்டுதலில் 2 நபர்கள் (Ph.D) முனைவர் பட்டம் பெற்றுள்ளனர். மேலும் இக்கல்வி ஆண்டில் M.Phil., ஆராய்ச்சி பட்ட வகுப்பில் 6 பேர்கள் பட்டம் பெற்றுள்ளனர்.

**இயற்பியல் துறை**

27.07.2016 அன்று சிக்கய்ய நாயக்கர் கல்லூரியின் இயற்பியல் துறை மூத்த பேராசிரியர் முனைவர் ஆ.இரத்தினசாமி அவர்கள் இத்துறைக்கு வருகை புரிந்து

மாணவர்களின் தனித்திறமையை வெளிப்படுத்த Success within you என்ற தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கம் மற்றும் பயிற்சிப் பட்டறை நடத்தி ஊக்குவித்தார்.

10.08.2016 அன்று கோவை பாரதியார் பல்கலைக்கழக ஆராய்ச்சி ஆய்வுக்குழு இத்துறைக்கு வருகைபுரிந்து ஆய்வுப் பணிகளைப் பார்வையிட்டு பகுதிநேர ஆராய்ச்சிப் படிப்பிற்கான கூடுதல் ஆராய்ச்சி (முனைவர் மற்றும் அறிவியல் நிறைஞர்) மாணவர் சேர்க்கைக்கு ஒப்புதல் அளித்தனர். மேலும் முழுநேர ஆராய்ச்சிப் படிப்பைத் தொடங்க அனுமதி மற்றும் பரிந்துரை செய்தனர்.

16.08.2016 அன்று நடைபெற்ற ஆய்வியல் அறிஞர் தேர்விற்கான வாய்மொழித்தேர்வில் தேர்ச்சி பெற்று (Ph.D, VIVA VOCE) திரு.எல்.எழில் இன்பன் அவர்கள் முனைவர் பட்டம் பெற்றார். 23.12.2016 அன்று நடைபெற்ற ஆய்வியல் நிறைஞர் வாய்மொழித்தேர்வில் (M.Phil VIVA VOCE) திரு.ஜி.பாண்டியராஜன் (ஆராய்ச்சி மாணவர்) ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெற்றார்.

இந்தக் கல்வியாண்டில் ஒரு லட்சம் ரூபாய் மதிப்பில் நானோ தொழில்நுட்ப ஆராய்ச்சிப் பணிகளுக்கான ஆய்வுக்கூடக் கருவிகளை முதுநிலை மாணவர்கள் பயன்படுத்தி வருகின்றனர். முனைவர்.க.பா இராஜேஷ் அவர்களுக்கு DST-SERB துறையின் மூலம் "Theoretical Investigation on All Optical Recording" என்ற தலைப்பில் ரூபாய் 22 லட்சம் மதிப்பில் ஒரு முதன்மை ஆய்வுத் திட்டம் (Major research Project) தெரிவு செய்யப்பட்டு ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தைப் பயன்படுத்தி ஒரு சிறப்பு "Computational Nano Optics Lab" ஆய்வுக்கூடம் அமைக்கப்பட்டு டிசம்பர் 2016 முதல் பயன்பாட்டில் உள்ளது. இந்த ஆராய்ச்சித் திட்டத்திற்கு உதவியாக எம்.உதயகுமார் (இக்கல்லூரி மாணவர்) Project Assistant ஆக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இயற்பியல் துறைத்தலைவர் முனைவர். ஹரேஷ் எம்.பண்டியா அவர்களுக்கு பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தில் (DRDO) இருந்து e-Nasika Chemical Vapour Characterization with TICS / TIMS என்ற தலைப்பில் ரூபாய் 10லட்சம் மதிப்பில் முதன்மை ஆராய்ச்சித் திட்டம் (Major research project) தெரிவு செய்யப்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மாநில அரசு நிதியில் இருந்து ரூபாய் 11000/- துறை நூலக மேம்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆய்வுக்கூட உபகரணங்கள் மற்றும் புத்தகங்கள் பெறப்பட்டுள்ளது.

இத்துறையின் மூலமாக இக்கல்லூரியில் முதல் முறையாக National Conference on Emerging Sensor Devices, Materials and Technology என்ற தலைப்பில் இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (DRDO) மூலம் ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஹரேஷ் எம்.பாண்டியா அவர்களால் நிதியுதவி பெறப்பட்டு 19,20 ஜனவரி 2017-ல் இரண்டு நாள் தேசியக் கருத்தரங்கம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இக்கருத்தரங்குகளில் DRDO SSPL e-Nasika திட்ட இயக்குனர் முனைவர் மனோஜ் ஷர்மா அவர்களும் பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த 8-க்கும் மேற்பட்ட அறிவியல் ஆராய்ச்சி வல்லுநர்கள் மற்றும் 250க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி மாணவர்களும் பங்கு கொண்டனர். இதில் 124 ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. அவற்றில் 35 ஆய்வுக்கட்டுரைகள் நமது கல்லூரியின் இயற்பியல் துறை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் oral மற்றும் Poster முறையில் சமர்ப்பித்தனர். இதில் இத்துறையின் முதுநிலை மாணவிகள் எம்.கார்த்திகா மற்றும் டி.திவ்யபாரதி சமர்ப்பித்த

ஆய்வுக்கட்டுரைகள் மிகச் சிறந்த ஆய்வுக்கட்டுரைகளாக அறிவியல் ஆராய்ச்சி வல்லுநர்கள் குழுவால் தெரிவு செய்யப்பட்டது. இக்கருத்தரங்கில் கருத்தரங்கு இதழ் (Conference Proceeding) மற்றும் சிறப்பு ஆய்வு இதழ் (Special Journal Issue) வெளியிடப்பட்டது.

முனைவர் ஹரேஷ் எம்.பாண்டியா மற்றும் முனைவர் வெ.அண்ணாமலை ஆகியோர் கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தின் இயற்பியல் பாடத்திட்டக் குழுவில் உறுப்பினர்களாக உள்ளனர்.

இக்கல்வியாண்டில் இத்துறையின் சார்பாக 50-க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி கட்டுரைகள் மிகவும் புகழ்பெற்றுள்ள உயர் impact factor கொண்ட பல்வேறு தேசிய மற்றும் பன்னாட்டு ஆய்வு இதழ்களில் வெளிவந்துள்ளன. இத்துறையின் ஆராய்ச்சி மாணவர் ப.கௌதமன் 16, 17 டிசம்பர் 2016-ல் K.S.R கல்லூரியில் நடைபெற்ற தேசிய கருத்தரங்கில் பங்குபெற்று சமர்ப்பித்த ஆராய்ச்சிக் கட்டுரை சிறந்த ஆய்வுக்கட்டுரையாக வல்லுநர்கள் குழுவால் தெரிவு செய்யப்பட்டது.

இத்துறையின் முதுநிலை மாணவியான ஜி.யோகேஸ்வரி Indira Gandhi National Single Girl Child Scholarship-க்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். இத்துறையின் மாணவர்களின் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதிக்காக RO filter ஒன்று ஸ்ரீ ஸ்ரீதர் குருஜி (ஹைதராபாத்) அவர்களால் வழங்கப்பட்ட நன்கொடையில் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

இத்துறையின் முகநூல் பிரிவு (http://www.facebook.com/physicschikkanna) வழியாக இக்கல்வியாண்டில் ஆயிரத்துக்கும் மேல் e-book பதிவேற்றும் செய்யப்பட்டு மொத்தம் 5000க்கும் மேற்பட்ட e-books பயன்பாட்டில் உள்ளன. இந்த முகநூல் பிரிவு வழியாக பல ஆராய்ச்சித் தகவல்கள் மற்றும் துறை சார்ந்த மேம்பாடுகள் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. மேலும் இத்தளத்தை சுமார் 500க்கும் மேற்பட்ட முன்னாள் மாணவர்கள் பின் தொடர்கிறார்கள்.

**விலங்கியல் துறை**

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றமும் இத்துறையும் இணைந்து கிராமப்புறப் பகுதிகளில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் பயன்பாடு குறித்த 5 நாள் பயிற்சிப் பட்டறையை நடத்தியுள்ளது. மேலும் இத்துறை சார்பாக அவ்வப்போது காளான் வளர்ப்பு, மீன் வளர்ப்பு, மண்புழு வளர்ப்பு, தேனீ வளர்ப்பு போன்ற பயிற்சிகள் பொது மக்களுக்கும், மகளிர் சுய உதவிக்குழு போன்ற தன்னார்வ அமைப்புகளுக்கும் அளிக்கப்பட்டு வருகிறது. பயிற்சி ஒருங்கிணைப்பாளராக முனைவர் ஆ.மோகன்குமார் அவர்கள் செயல்பட்டு வருகிறார்.

**கணினி அறிவியல் துறை**

10.02.2017 அன்று துறையின் மன்றத் துவக்கவிழாவில் எல்.ஆர்.ஜி அரசு மகளிர் கலைக்கல்லூரியிலிருந்து ஆங்கிலத்துறை உதவிப்பேராசிரியர் முனைவர்.பி.மாலதி அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு Communication Skills Required For Placement என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற பல்கலைக்கழகத் தேர்வில் இறுதியாண்டு முதுநிலை மாணவ-மாணவியர் மூன்று பாடங்களில் 100% தேர்ச்சி பெற்றுள்ளனர். பேராசிரியர் ஆ.கீதா அவர்கள் இக்கல்வி ஆண்டில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார்.

ஆராய்ச்சி மாணவர்கள் தங்களது மேற்பார்வையாளர்களின் வழிகாட்டுதலின்படி பல்வேறு இடங்களில் நடைபெற்ற தேசிய மற்றும் சர்வதேசக் கருத்தரங்குகளில் ஆராய்ச்சிக்

கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளனர். முனைவர்.கீதா அவர்கள் 7 பயிலரங்குகளில் கலந்து கொண்டுள்ளார். பிற கல்லூரிகளிலும் Big Data Analysis என்ற தலைப்பில் சிறப்புரையாற்றியுள்ளார்.

Emotional Itelligence என்ற தலைப்பில் முனைவர்.ஜி.பி.கார்த்திகேயன் M.Com IB துறைத்தலைவர் அவர்கள் மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தார். BIG DATA AND APPLICATION என்ற தலைப்பில் முனைவர்.ஆ.கீதா அவர்கள் மாணவர்களுக்கு கருத்துரை வழங்கினார்.

**கணினி பயன்பாட்டியல் துறை**

2016-2017ஆம் கல்வி ஆண்டின் முதல் பருவத் துவக்கத்தில் இருந்து கணினி பயன்பாட்டியல் துறை அரசு ஆணையின் படி தனித்துறையாக செயல்படத் துவங்கியது. கணினி பயன்பாட்டியல் துறை மன்றம் (KONNECT-COMPAPP) கல்லூரி முதல்வர் தலைமையில் 10.08.2016 அன்று துவக்கி வைக்கப்பட்டது. RUSA நிதியிலிருந்து கணினி பயன்பாட்டியல் துறைக்கு தனி கணினி ஆய்வகம் ஏற்படுத்தப்பட்டு 10.08.2016 அன்றே கல்லூரி முதல்வர் தலைமையில் இனிதே துவங்கப்பட்டது. 10.07.2016 அன்று மூன்றாமாண்டு மாணவர்கள் ஆறு பேர் பொள்ளாச்சியில் நடைபெற்ற ANDROID APPLICATION DEVELOPMENT-WORKSHOP-ல் பங்கு பெற்று அக்கருத்துக்களை இத்துறை இரண்டாம் மற்றும் மூன்றாமாண்டு மாணாக்கர்களுக்கு ஒரு பயிற்சி பட்டறை மூலம் வழங்கினர்.

10.09.2016 மற்றும் 11.09.2016 ஆகிய தேதிகளில் PSG தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெற்ற DATA ANALYTICS USING R என்ற பயிற்சிப் பட்டறையில் M.phil., மாணவிகள் E.அனுசுயா, S.சந்தியா மற்றும் சபானா ஆகியோர் கலந்து கொண்டார்கள். 12.09.2016 அன்று குமரன் கலை அறிவியல் கல்லூரியைச் சார்ந்த பேராசிரியர் திருமதி ரதிமீனாட்சி அவர்கள் VISUAL C++ TUTORIAL என்ற தலைப்பில் உரையாற்றினார். 15.09.2016 அன்று கணினி பயன்பாட்டியல் துறை மாணவிகளுக்கு உடல் நலன் மற்றும் மனநலம் குறித்த ஆலோசனை வழங்கப்பட்டது. 24.09.2016 அன்று BCA மூன்றாமாண்டு மாணவர்கள் நான்கு பேர் IOS APP DEVELOPMENT என்ற பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டனர். முனைவர். கோ.மு.நசீரா அவர்களின் வழிகாட்டுதலில் மூன்று Ph.D மாணவிகளும், இரண்டு M.Phil மாணவிகளும் வாய்மொழித்தேர்வு முடித்து பட்டம் பெற்றுள்ளனர். பாடப்புத்தகங்கள் மற்றும் 40 பொது புத்தகங்களும் முனைவர்.கோ.மு.நசீரா அவர்களால் இத்துறை நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

நவம்பர் 2016-ல் MINISTRY OF ELECTRONICS AND INFORMATION TECHNOLOGY, GOVERNMENT OF INDIA சார்பாக ஹைதராபாத்-ல் நடைபெற்ற DIGITAL INDIA-TRAIN THE TRAINER என்ற 15 நாள் பயிற்சிப் பட்டறையில் முனைவர்.கோ.மு.நசீரா அவர்கள் கலந்து கொண்டார். 19.01.2017 மற்றும் 20.01.2017 ஆகிய தேதிகளில் DRDO சார்பில் நமது கல்லூரியில் நடைபெற்ற தேசிய அளவிலான கருத்தரங்கில் முனைவர்.கோ.மு.நசீரா அவர்கள் DATA ANALYSIS AND PATTERN RECOGNITION என்ற தலைப்பில் உரையாற்றினார். மேலும் தேசிய மற்றும் மாநில அளவிலான பல்வேறு கருத்தரங்குகளில் பங்கேற்று உரையாற்றியுள்ளார். திருமதி R.சுதா அவர்கள் கொங்கு பொறியியல் கல்லூரியில் 05.08.2016 முதல் 07.08.2016 வரை நடைபெற்ற NETWORK SIMULATOR NS2 என்ற தேசியக் கருத்தரங்கில் பங்கேற்றார். 25.01.2017 அன்று நந்தா

கலை அறிவியல் கல்லூரியில் கல்லூரிகளுக்கு இடையே நடைபெற்ற போட்டிகளில் இரண்டாமாண்டு மாணவர்கள் S.அஜீத்குமார் மற்றும் J.மோகன்குமார் ஆகியோர் குறும்படம் இயக்கியதில் இரண்டாம் பரிசு பெற்றனர்.

19.02.2017 அன்று ICECRT நிறுவனத்தின் ஆசிரியர் பணிக்கான வேலை வாய்ப்பில் தகுதி பெற்று மூன்றாமாண்டு மாணவி கமலி தேர்வு செய்யப்பட்டுள்ளார். 01.02.2017 மற்றும் 02.02.2017 ஆகிய தேதிகளில் இயற்பியல் துறையைச் சேர்ந்த திரு.R.வெங்கடேஷ் (DRDO RESEARCH ASSOCIATE) FIBER OPTICS AND MAGNETIC MEDIA என்ற தலைப்பில் மூன்றாமாண்டு மாணவர்களுக்கு உரையாற்றினார். 03.02.2017 அன்று சகூரி தொழில்நுட்ப கல்லூரியில் நடைபெற்ற SRISHTA 17 என்ற தொழில் நுட்பப் போட்டிகளில் BCA இரண்டாமாண்டு மாணவி S.சர்மிளா PAPER PRESENTATION-ல் மூன்றாம் பரிசு பெற்றார். 03.02.2016 அன்று பொள்ளாச்சியில் PHO & MY SQL OF OPEN SOURCE TECHNOLOGY என்ற பயிற்சிப் பட்டறையில் BCA மூன்றாமாண்டு மாணவர்கள் கலந்து கொண்டனர். 06.02.2017 அன்று கோவை ஜெயேந்திர சரஸ்வதி கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற sysparasie 17 என்ற தொழில் நுட்பப் போட்டிகளில் BCA இரண்டாமாண்டு மாணவி R.சர்னிஷா PAPER PRESENTATION-ல் மூன்றாம் பரிசு பெற்றார்.

**ஆடை வடிவமைப்பியல் துறை**

இத்துறை ஆசிரியர்கள் சர்வதேச மற்றும் தேசிய அளவிலான கருத்தரங்குகளில் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளனர். இத்துறையைச் சேர்ந்த மூன்றாம் ஆண்டு மாணவர் அ.சூரிய பிரகாஷ் கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ஆடை வடிவமைப்பு மற்றும் நாகரீகம் துறை சார்பாக 31.07.2016 அன்று நடைபெற்ற மாநில அளவிலான Emerging Trends in Textiles and Fashion என்ற கருத்தரங்கில் பங்கேற்றார்.

இத்துறையைச் சார்ந்த மூன்றாம் ஆண்டு மாணவர்கள் V.ராகுல், G.குணசேகரன், K.மாசிலாமணி ஆகியோர் கொங்கு கலை அறிவியல் கல்லூரி ஈரோடு. மேலாண்மை மற்றும் கணினி அறிவியல் துறை சார்பாக 15.02.2017 அன்று நடைபெற்ற கல்லூரிகளுக்கு இடையேயான Make Talent Hunt போட்டிகளில் பங்கேற்றனர். இத்துறையின் Association Inauguration Function 17.02.2017 அன்று நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக முனைவர் M.லதா (NIFT TEA College of Knit Wear Fashion) கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தார்.

**வணிகவியல் துறை**

RUSA நிதி உதவியுடன் 30 கணினிகளைக் கொண்டு இத்துறைக்கென தனியாக கணினி ஆய்வகம் அமைக்கப்பட்டுள்ளது.

14.02.2017 மற்றும் 17.02.2017 ஆகிய தேதிகளில் M.Phil., Ph.D மாணவர்களுக்காக ஆய்வியல் அணுகுமுறைகள் என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் கோவை பி.எஸ்.ஜி, ஆர்.கிருஷ்ணம்மாள் கல்லூரி பேராசிரியர் S.சங்கீதா அவர்கள் சிறப்புரையாற்றினார்.

13.02.2017 அன்று மூன்றாமாண்டு பி.காம் (சிஏ) மாணவர்களுக்காக சிறப்பு சொற்பொழிவு நடைபெற்றது. இதில் CYBER LAW என்ற தலைப்பில் CIMAT கல்வி

நிறுவனத்தின் மேலாண்மைத் துறைத் தலைவர் முனைவர்.கீதாலட்சுமி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

28.02.2017 அன்று வணிகவியல் மன்ற விழா நடைபெற்றது. இவ்விழாவில் கோவை அரசு கலைக்கல்லூரி அரசியல் அறிவியல் துறைத்தலைவர் முனைவர். பி.கனகராஜ் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

பல்வேறு இடங்களில் நடைபெற்ற பல்வேறு தேசிய கருத்தரங்குகளில் இத்துறையைச் சேர்ந்த பேராசிரியர் முனைவர். கோப்பண்ண சாமி 6 ஆய்வுக்கட்டுரைகளையும் பேராசிரியர் கனகராஜ் மற்றும் புஷ்பலதா ஆகியோர் தலா 1 ஆய்வுக்கட்டுரைகளையும் சமர்ப்பித்துள்ளனர்.

வணிகவியல் துறைத்தலைவர் பேராசிரியர் எஸ்.இராமையா அவர்கள் பாரதியார் பல்கலைக்கழக ஆட்சிமன்ற குழு உறுப்பினராக இக்கல்லூரியின் சார்பில் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

**வேதியியல் துறை**

கடந்த பருவத்தேர்விற்கான பாரதியார் பல்கலைக்கழகம் வெளியிட்ட தேர்வு முடிவில் முதுகலை மாணவரான செ.வினோத் (2014-16 கல்வியாண்டு) முதல் மாணவராக தேர்ச்சி பெற்று பல்கலைக்கழகத் தங்கப்பதக்கம் வென்று துறைக்கும் கல்லூரிக்கும் பெருமை சேர்த்தார். மேலும் அதே வகுப்பினைச் சார்ந்த மாணவிகளான கு.கோகிலாமணி மற்றும் கோ.வினிதா ஆகியோர் முறையே 2 மற்றும் 4ஆம் இடத்தைப் பிடித்து துறையின் பெருமையினை உரக்கப் பறைசாற்றினார். அக்டோபர் 2016ல் முனைவர்.மு.சிவதயாநிதி அவர்களின் Graphite Oxide based composites for the degradation of organic waste via greener route என்ற Minor ஆய்வுத்திட்டத்திற்கு ரூபாய் 2,10,000 UGC ஒதுக்கி இருக்கிறது. 10.08.2016 மற்றும் 31.10.2016 ஆகிய தினங்களில் முனைவர்.கு.இராஜகோபால் அவர்களின் பி.எச்.டி (பிரிவு பி) மாணவர்களான திரு.சுந்தர் மற்றும் திரு.ஞானசுந்தர் ஆகியோரின் ஆய்விற்கான வாய்மொழித்தேர்வு பாரதியார் பல்கலைக்கழக வேதியியல் துறையில் நடைபெற்றது.

இவ்வாண்டிற்கான வேதியியல் மன்றம், பாரதிதாசன் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த முனைவர்.ஆர்.ரமேஷ் மற்றும் திருச்சி அண்ணா பல்கலைக்கழகத்தைச் சார்ந்த முனைவர்.கே.ஜோதி வெங்கடாசலம் மற்றும் தேசிய தொழில்நுட்ப நிறுவனம், திருச்சியைச் சார்ந்த எம்.அறிவழகன் ஆகியோர் சிறப்புரையாற்ற, கல்லூரி முதல்வர் முனைவர்.கு.சண்முகசுந்தரம் அவர்களின் தலைமையில் துவக்கப்பட்டது.

21.02.2017ல் நடைபெற்ற வேதியியல் மன்ற விழாவில் திரு.ஹரிஷ்குமார் (ரோட்ரக்ட்) அவர்கள் கலந்து கொண்டு "அடுத்த படி" என்ற தலைப்பில் மாணவர்களுக்கு ஊக்க உரை நிகழ்த்தினார்.

24.02.2017 அன்று நடைபெற்ற வேதியியல் மன்ற நிறைவு விழாவில் கல்லூரி முதல்வர் அவர்கள் தலைமை வகித்தார். பெங்களூர் தேசிய உயிர் அறிவியல் நிறுவனத்தை சார்ந்த (டாட்டா அடிப்படை ஆய்வு நிறுவனம்) முனைவர்.பொ.பாபு அவர்கள் "பொருண்மை நிரல் ஆய்வு" என்ற தலைப்பில் உரையாற்றினார். இக்கல்வியாண்டில் இத்துறையைச் சார்ந்த ஆசிரியர்கள் வெவ்வேறு சர்வதேச மற்றும் தேசிய ஆய்விதழ்களில் 7 ஆராய்ச்சி கட்டுரைகளை வெளியிட்டுத் துறைக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

**சர்வதேச வணிகத்துறை**

30.08.2016 முதல் 01.09.2016 வரை முதுகலை எம்.காம் (IB) மாணவ

மாணவியர்கள் சென்னை துறைமுகத்தைப் பார்வையிட்டு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி சார்ந்த பயிற்சியைப் பெற்றனர். மேலும் அவர்கள் Frieght Links International (India) Pvt. Ltd., என்னும் கப்பல் போக்குவரத்து நிறுவனத்தைப் பார்வையிட்டு கடல் போக்குவரத்து சார்ந்த களப் பயிற்சியைப் பெற்றனர்.

சர்வதேச வணிகத்துறையில் பயிலும் மாணவியர்களுக்கான தொழில் முனைவு சார்ந்த திறமைகள் என்ற தலைப்பில் கருத்தரங்கு மற்றும் பயிற்சிப் பட்டறை கடந்த 06.02.2017 முதல் 14.02.2017 வரை திருமதி அபிராமசுந்தரி, (உதவிப்பேராசிரியர், கணிதவியல் துறை ஸ்ரீ நாராயணகுரு கல்லூரி, கோயம்புத்தூர்) அவர்களால் திறம்பட நடத்தப் பெற்று நிறைவேறி உள்ளது. இதில் மாணவியர்கள் தொழில் தொடங்க மூலதனம் பொருட்கள் மற்றும் சந்தையிடல் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது.

15.02.2017 முதல் 23.02.2017 வரை காளான் வளர்ப்பு மற்றும் ஏற்றுமதி என்ற கருத்தரங்கு மற்றும் பயிற்சி முகாம் முனைவர் யு.விஜயசித்ரா, (உதவிப்பேராசிரியர் நுண் உயிரியல் ஸ்ரீ நாராயணகுரு கல்லூரி, கோயம்புத்தூர்) அவர்களால் நடத்தப் பெற்றது. இதில் காளான் வளர்ப்பு சார்ந்த பயிற்சி, மூன்றாம் ஆண்டு இளங்கலை மற்றும் முதுகலை மாணவ-மாணவியர்களுக்கு திறம்பட வழங்கப்பட்டது.

சர்வதேச வணிகத்துறையின் மன்ற துவக்க விழா கடந்த 20.02.2017 அன்று திருமதி வி.புவனேஷ்வரி, (உதவிப்பேராசிரியர், கணிப்பொறி அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை, பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்) கலந்து கொண்டு Big Data Analytics in International Business என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார்.

ஏற்றுமதி செயல்முறை மற்றும் ஆவணமாக்கல் என்ற தலைப்பில் 22.02.2017 அன்று திரு.சைபுதீன் (ஏற்றுமதி தொழில் ஆலோசகர், கோயம்புத்தூர்) அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

இத்துறை பேராசிரியர் முனைவர் க.ப.கார்த்திகேயன் அவர்கள் தேசியக் கருத்தரங்கில் 10 ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளார். மேலும் பேராசிரியர் முனைவர் கு.சந்திரசேகரன் அவர்கள் தேசியக்கருத்தரங்கில் 1 ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்துள்ளார்.

**நூலகம்**

கல்லூரி நூலகத்தில் சுமார் 23,000 புத்தகங்கள் உள்ளன. இந்த ஆண்டு மாநில நிதியின் மூலமாக பல்வேறு துறைகளுக்காக சுமார் 527 புத்தகங்கள் அந்தந்தத் துறைகளின் மூலமாக வாங்கப்பட்டுள்ளன. மேலும் மாணவ, மாணவியரின் குறிப்பு உதவிக்கு UGC Inflib.net வழங்கும் N.List மூலமாக சுமார் 80,000 மின்புத்தகங்களும் 3000 மின் இதழ்களும் பெறப்பட்டு கல்லூரி வளாகம் முழுவதும் அனைத்து துறைகளும் பயன்பெறும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கல்லூரி நூலகம் Autolib என்ற வணிக மென்பொருளின் உதவியால் Automation செய்யப்பட்டு நவீன கருவிகளான Bar Code, Scanner மற்றும் ICT Based Information and Communication Technology முறையில் நூலக மேலாண்மையும் சேவையும் வழங்கி வருகிறது. நமது கல்லூரி நூலகம் கீழ்க்காணும் சேவைகளை மாணாக்கர்களுக்கு வழங்கி வருகிறது.

Web OPAC
Overnight Issuses
Internet Services
Reference Services
Reprographic Services
Current Awarness Services
E-Library
Open Source Resources
Giddiness to research Scholars and Providing assistance in Searching Databases.

ஈரோடு வெள்ளாளர் மகளிர் கல்லூரியின் இரண்டாம் ஆண்டு நூலகம் மற்றும் தகவல் அறிவியல் துறை மாணவி ஆனந்தி அவர்களுக்கு நூலக மேலாண்மை மற்றும் தகவல் வழுங்கும் பயிற்சி 22 நாட்கள் வழுங்கப்பட்டது.

மாணவர்கள் நூலகத்திற்கு வருகை புரிந்த நாட்கள், நூலகத்தில் செலவிட்ட நேரங்கள், பயனடைந்த நூலக சேவைகள், அவர்களின் நடத்தைகள் போன்றவற்றின் அடிப்படையில் இரண்டு மாணவர்கள் இவ்வாண்டிற்கான Best Library User Award க்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**உடற்கல்வித்துறை**

தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் இரா.செங்கமுத்து அவர்கள் உடற்கல்வி இயக்குனராக பொறுப்பு வகித்து வருகிறார். பல்கலைக்கழக அளவில் நடைபெற்ற பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று இக்கல்லூரி மாணவ, மாணவியர் பல்வேறு பரிசுகளையும், விருதுகளையும் பெற்று இக்கல்லூரிக்கு பெருமை சேர்த்து வருகின்றனர். குறிப்பாக ஈட்டி எறிதல் போட்டியில் மூன்றாமாண்டு பி.ஏ வரலாற்று மாணவர் ராகுல் இரண்டாமிடத்தையும், ஆணழகன் போட்டியில் இரண்டாமாண்டு பி.எஸ்.சி கணினி அறிவியல்துறை மாணவர் எம்.சுபாஷ் முதலிடத்தையும் அரை மாரத்தான் போட்டியில் வணிகவியல் பி.காம்.மூன்றாமாண்டு மாணவர் டி.சந்தோஷ்குமார் மூன்றாமிடத்தையும் பல்கலைக்கழக அளவில் வென்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

**தேசிய மாணவர் படை**

நமது கல்லூரியில் 90 தேசிய மாணவர்படை மாணவ, மாணவியர் உள்ளனர். நமது கல்லூரியின் தேசிய மாணவர் படை மாணவ, மாணவியர் வழக்கம்போல் பல்வேறு முகாம் மற்றும் பயிற்சிகளில் பங்கேற்றனர். சேலம் அரசு கலைக் கல்லூரியில் நடைபெற்ற சிறந்த துப்பாக்கி சுடும் மாணவர் தேர்விற்கு நமது கல்லூரியின் சார்பாக 5 மாணவர்கள் பங்கேற்றனர். தால்சானிக் தேர்வு முகாம் பரமத்திவேலூரில் உள்ள கந்தசாமி கண்டர் கல்லூரியில் 23.05.2016 முதல் 01.06.2016 வரை நடைபெற்றது. இதில் நமது கல்லூரியைச் சேர்ந்த 4 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

பெண்களுக்கான தேசிய மலை ஏறும் பயிற்சி முகாம் 23.05.2016 முதல் 30.05.2016 வரை உதகமண்டலத்தில் நடைபெற்றது. இதில் நமது கல்லூரியின் மாணவியர் 5பேர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். தால்சானிக்கின் இரண்டாவது தேர்வு முகாம் பரமத்திவேலூரில் உள்ள கந்தசாமி கண்டர் கல்லூரியில் 05.06.2016 முதல் 14.06.2016 வரை நடைபெற்றது. இதில் 4 மாணவர்கள் கலந்து கொண்டனர். மண்டலங்களுக்கு இடையிலான தால்சானிக் முகாம் 17.06.2016 முதல் 26.06.2016 வரை தர்மபுரியில் உள்ள ஜெயம் தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெற்றது. இதில் நமது மாணவர்கள் இருவர் கலந்து கொண்டனர்.

உலக யோகாதின முகாம் 21.06.2016 அன்று நமது கல்லூரி வளாகத்தில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இதில் நமது மாணவர்கள் 85 பேரும் 600க்கும் மேற்பட்ட பள்ளி மாணவ,

மாணவியர்களும் பங்கேற்றனர். மகளிருக்கான தால்சானிக் தேர்வு முகாம் பி.எஸ்.ஜி தொழில் நுட்பக் கல்லூரியில் 01.07.2016 முதல் 10.07.2016 வரை நடைபெற்றது. இதில் நமது கல்லூரி மாணவி ஒருவர் பங்கேற்றார். கோவையில் உள்ள கற்பகம் பல்கலைக்கழகத்தில் அடிப்படை ஆளுமை பயிற்சி முகாம் 09.07.2016 முதல் 18.07.2016 வரை நடைபெற்றது. இதில் நமது கல்லூரி மாணவர் ஒருவர் பங்கேற்றார். 20.08.2016 முதல் 29.08.2016 வரை கோவையில் உள்ள தியாகி என்.ஜி.இராமசாமி பள்ளியில் நடைபெற்ற தேசிய மாணவர் படை முகாமில் 31 மாணவர்களும் ஒரு தேசியமாணவர் படை அதிகாரியும் கலந்து கொண்டனர்.

25.09.2016 முதல் 04.01.2016 வரை மண்டலங்களுக்கு இடையிலான குடியரசு தினப்போட்டி முகாம் திருச்சியில் உள்ள பெல் வளாகத்தில் நடைபெற்றது. இதில் இரண்டாம் ஆண்டு வேதியியல் துறையைச் சார்ந்த வேலுபிரபாகர் என்ற மாணவர் மற்றும் நமது தேசிய மாணவர் படை அதிகாரியும் கலந்து கொண்டனர். தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் கல்லூரி வளாகம் தூய்மை செய்யப்பட்டது. இதில் 80க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். மாவட்ட குடியரசு தின நிகழ்ச்சி நமது கல்லூரி வளாகத்தில் 26.01.2017 அன்று கொண்டாடப்பட்டது. இதில் 90 மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர். வாக்காளர் விழிப்புணர்வு பேரணி நமது கல்லூரி வளாகத்தில் 26.01.2017 அன்று நடைபெற்றது.

அனைத்துத்துறை இறுதியாண்டு மாணவ மாணவியர்களுக்காக மென்திறன் பயிற்சி மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக தமிழ்நாடு உயர்கல்வி மன்றம் ஏற்படுத்தப்பட்டு உள்ளது. இதற்காக தமிழ்நாடு உயர்கல்வி மன்றம் (TANSCHE) சென்னை, பயிற்சி அளிக்க தேவையான உபகரணங்களான ஒலிபெருக்கி, தொலைக்காட்சி, நகல் எடுக்கும் இயந்திரம், புகைப்படம் எடுக்கும் கருவி மற்றும் கணிப்பொறி வாங்குவதற்காக ரூபாய் 2,00,000/- மற்றும் பயிற்சி அளிப்பவர்களுக்கு 70 மணிநேரங்களுக்கு ரூபாய் 2,25,000/- இதனுடன் ரூபாய் 25,000/- இதர செலவீனங்கள் மேற்கொள்ளவும் ஆக மொத்தம் ரூபாய் 4,50,000/- இந்த வருடம் வழங்கி உள்ளது. இம்மையத்தின் ஒருங்கிணைப்பாளராக பேராசிரியர் முனைவர் அ.முருகேசன் அவர்கள் செயல்படுகின்றார்.

**நாட்டு நலப்பணித் திட்டம்**

வேதியியல் பேராசிரியர் முனைவர் எஸ்.பி.ராஜாசிங், விலங்கியல் போராசிரியர் முனைவர் ஆ.மோகன்குமார், இயற்பியல் பேராசிரியர் வி.செந்தில்குமார், ஆடை வடிவமைப்புத் துறை பேராசிரியர் செல்வி, எஸ்.கோகிலவாணி ஆகியோரை, திட்ட அலுவலர்களாகக் கொண்ட நான்கு அலகுகள் இக்கல்லூரியில் உள்ளன. கல்லூரி வரலாற்றில் இவ்வாண்டு உலக பன்னாட்டு இணையதளத்தில் நமது கல்லூரி நாட்டு நலப்பணித்திட்டம் (NSS) முதன் முதலாக இடம் பெற்றுள்ளது.

நமது நாட்டு நலப்பணித்திட்ட மாணவி செல்வி. பானுப்பிரியா (2ம் ஆண்டு விலங்கியல்) ஹிமாச்சலப்பிரதேசத்தில் நடந்த தேசிய ஒருமைப்பாட்டு முகாமில் தமிழ்நாட்டின் சார்பாக கலந்து கொண்டு 7 நாட்கள் பயிற்சி மேற்கொண்டார். நாட்டு நலப்பணித்திட்டம் அலகு I&II சார்பாக கருமாபாளையம், செம்மாம்பாளையத்தில் 106 மாணவர்களைக் கொண்டு சிறப்பு முகாம் நடத்தப்பட்டது. அலகு III&IV சார்பாக, முருகம்பாளையத்தில் 43 மாணவர்களைக் கொண்டு சிறப்பு முகாம் நடத்தப்பட்டது. சிறப்பு முகாமில் கலந்து கொண்ட மாணக்கர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. நாட்டு நலப்பணித்திட்ட சார்பாக கல்லூரியில் குருதி கொடையாளர் சங்கம் தொடங்கப்பட்டது. 2016-17ல் 36 முகாம்கள் நடத்தப்பட்டன.

**வேலை வாய்ப்புத் துறை**

வணிகவியல் துறையைச் சேர்ந்த பேராசிரியர் முனைவர் எம்.கோப்பண்ணசாமி அவர்கள் வேலைவாய்ப்பு அலுவலராகப் பொறுப்பு வகிக்கிறார். எம்.காம் (ஐபி) மற்றும் பி.காம்.(ஐபி) மாணவர்கள் 16 பேர் TAXVALLEY நிறுவனத்திலும் 12 மாணவர்கள் SCM GARMENTS நிறுவனத்திலும் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

வேதியியல் துறையைச் சார்ந்த 24 மாணவர்கள் பல்வேறு நாட்களில் நடந்த வேலைவாய்ப்பு முகாமில் பங்கேற்று வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

ஆடை வடிவமைப்பு மற்றும் நாகரீகம் துறையைச் சார்ந்த 16 மாணவ - மாணவியர் வளாக நேர்முகத்தேர்வின் மூலமாக பணிநியமனம் பெற்றுள்ளனர்.

**பசுமை சுற்றுச்சூழல் இயக்கம் (ECO Club)**

விலங்கியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் ஆ.மோகன்குமார் தலைமையில் இவ்வியக்கம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. சென்ற வருடம் கலாம் கனவுப் பூங்கா உருவாக்கப்பட்டு ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இன்று அந்த மரங்கள் கிட்டத்தட்ட பன்னிரெண்டு அடிக்குமேல் வளர்ந்து சோலையாகக் காட்சி தருகிறது. கல்லூரியில் நடைபயிற்சி மேற்கொள்ளும் திரு.கண்ணன் தலைமையில் இந்த வருடம் தண்ணீர் பற்றாக்குறை காரணமாக சொட்டு நீர் பாசனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**மென்திறன் பயிற்சி மையம்**

அனைத்துத்துறை இறுதியாண்டு மாணவ மாணவியர்களுக்காக மென்திறன் பயிற்சி மையம் ஏற்படுத்தப்பட்டு உள்ளது. இதற்காக தமிழ்நாடு உயர்கல்வி மன்றம் (TANSCHE) சென்னை பயிற்சி அளிக்க தேவையான உபகரணங்களான ஒலிபெருக்கி, தொலைக்காட்சி, நகல் எடுக்கும் இயந்திரம், புகைப்படம் எடுக்கும் கருவி மற்றும் கணிப்பொறி வாங்குவதற்காக ரூபாய் 2,00,000/- மற்றும் பயிற்சி அளிப்பவர்களுக்கு 70 மணி நேரங்களுக்கு ரூபாய் 2,25,000/- இதனுடன் இதர செலவீனங்கள் மேற்கொள்ள ரூபாய் 25,000/- ஆக மொத்தம் ரூபாய் 4,50,000/- இந்த வருடம் வழங்கியுள்ளது. இம்மையத்தின் ஒருங்கிணைப்பாளராக ஆங்கிலத்துறைப் பேராசிரியர் முனைவர் அ.முருகேசன் அவர்கள் செயல்படுகின்றார்.

**மகளிர் மன்றம்**

மகளிர் மன்ற ஒருங்கிணைப்பாளராக கணினி பயன்பாட்டில் துறைத்தலைவர் முனைவர் கோ.மு.நசீரா அவர்கள் செயல்பட்டு வருகிறார். Tirupur Swan Organisation நடத்திய மகளிர் ஒருங்கிணைப்புக் குழுவில் இளநிலை மூன்றாமாண்டு மாணவியர் கலந்து கொண்டு சான்றிதழ்களைப் பெற்று வந்தனர். 08.03.2017 அன்று உலக மகளிர் தினத்தை முன்னிட்டு பல்வேறு கலைநிகழ்ச்சிகளும் போட்டிகளும் நடைபெற்றன. BCA துறையில் உள்ள வெண்டிங் மிஷின் கல்லூரியின் அனைத்து மாணவிகளின் நலனுக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**பொது நிகழ்வுகள்**

இந்தக் கல்வியாண்டில் கல்லூரியில் பொதுவான பல்வேறு வளர்ச்சிப் பணிகள் நடைபெற்றுள்ளன. குறிப்பாக 1987 - 1990ஆம் ஆண்டுகளில் இக்கல்லூரியில் படித்த அனைத்துத் துறை மாணவர்கள் இணைந்து ரூபாய் 8 லட்சம் மதிப்பில் OMR Software and Office Automation, Admission Software வசதிகளை செய்து தந்துள்ளனர்.

இக்கல்லூரியின் வடக்குப் பகுதியில் நட்டு வளர்க்கப்படும் அப்துல்கலாம் நினைவு பூங்காவிலுள்ள 1000 மரங்களுக்கு விலங்கியல் துறைப் பேராசிரியர் மோகன்குமார் ஏற்பாட்டில்

தொடர்ந்து நீரூற்றி பராமரித்து வரும் வனத்துக்குள் திருப்பூர் அமைப்பிற்கு நன்றி.

இக்கல்லூரியின் தெற்குப் பகுதியில் உள்ள 500 மரங்களுக்கு தொடர்ந்து நீரூற்றி பராமரித்து வரும் நமது கல்லூரியின் முன்னாள் மாணவர் திரு. கண்ணன் மற்றும் அவர்கள் குழுவினருக்கு நன்றி.

பொதுநூலகம் மற்றும் துறை நூலகங்களுக்காக ரூபாய் 2லட்சம் மதிப்பில் நூல்கள் வாங்கப்பட்டுள்ளன. Equipments and Stores Maintanance நிதி பெறப்பட்டு பல்வேறு துறைகளுக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை பெறப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. பொதுப்பணித்துறையின் சார்பாக அவ்வப்பொழுது கல்லூரி வளாகம் பராமரிப்பு செய்யப்படுகிறது. மேலும் கணினி அறிவியல் மற்றும் வணிகவியல் வளாகத்தில் இரும்பு கிரில் அமைக்கப்பட்டுள்ளது. கல்லூரி வளாகத்தில் ஆங்காங்கே தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. பழுதடைந்த கழிப்பறைகள் செப்பனிடப்பட்டுள்ளன.

**செய்ய வேண்டிய பணிகள்**

பொன்விழாவைக் கடந்து வெற்றி நடை போடும் இக்கல்லூரியில் உடனடியாக செய்து முடிக்கப்பட வேண்டிய பணிகள் பல்வேறு உள்ளன. குறிப்பாக நூலகத்திற்கான போதுமான கட்டிட வசதியில்லை. போதுமான வகுப்பறைகளும் இருக்கைகளும் இல்லாத காரணத்தினால் மாணவர்கள் சிரமப்படுகின்றனர். புதிதாகப் பாடப்பிரிவுகளை தொடங்கி இன்னும் கூடுதலாக மாணவர் சேர்க்கை நடத்த முடிவதில்லை. விழா மற்றும் கருத்தரங்கு நடத்துவதற்கு அரங்கு வசதியில்லை, மாணவிகளுக்குத் தனியாக விடுதி வசதியில்லை, தொடங்கப்பட்ட பணியும் பல ஆண்டுகளாக நிறைவு பெறாமல் உள்ளது. இப்பணிகளைச் செய்து முடிப்பதற்கு அரசாங்கத்தை மட்டுமே நம்பியிராமல் திருப்பூர் மாநகரின் தொழில் அதிபர்களையும் வள்ளல் பெருமக்களையும் நம்பியுள்ளோம். கல்லூரி சிறப்பாக நடைபெற எல்லா விதத்திலும் உறுதுணையாக விளங்கிய அத்துணை நல் இதயங்களுக்கும் இந்நேரத்தில் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைவருக்கும் நன்றி! வணக்கம்!

## பணி நிறைவு பெறும் கல்லூரி முதல்வர்

# முனைவர் கு. சண்முகசுந்தரம்

எம்.காம்., எம்.ஃபில்., பிஎச்.டி.



# பணி நிறைவு பெறும் அலுவலகப் பணியாளர்கள்



திருமதி **எஸ்.பத்மாவதி**
நிதியாளர்

---



திரு. **வே.செல்வநாயகம்**
உதவியாளர்

| Computer Related Words | Meaning in Tamil |
|---|---|
| Animation | - அசைவூட்டம் |
| Anti-Virus | - நச்சு நிரற் கொல்லி / நச்சு நிரல் எதிர்ப்பான் |
| Applet | - குறுநிரல் |
| Application | - செயலி |
| Archive | - காப்பகம் |
| Artificial intelligence | - செயற்கை நுண்ணறிவு |
| Assembler | - பொறிமொழியாக்கி |
| Assembly Language | - பொறிமொழி |
| Audio | - ஒலிதம் |
| Auxiliary Storage | - துணைதேக்கம் |
| Bar Code | - பட்டைக்குறிமுறை |
| Bar Code Scanner | - பட்டைக்குறிமுறை வருடி |
| Bar Printer | - பட்டை அச்சுப்பொறி |
| Binary Code | - இரும குறிமுறை |
| Bit | - நுண்மி |
| Blog | - வலைப்பதிவு |
| Boot | - தொடக்கு |
| Broadband | - அகலப்பட்டை |
| Browser | - உலாவி |
| Browsing | - உலாவுதல் |
| CD burning | - குறுவட்டு எரித்தல் |
| CD Player | - இறுவட்டு இயக்கி |
| Channel | - தடம் |
| Client | - வாடிக்கையாளர் |
| Cloud Computing | - முகிலக் கணிப்பு |
| Compact disc (CD) | - குறுவட்டு / இறுவட்டு |
| Compiler | - தொகுப்பி |
| Compiler Language | - தொகுப்பு மொழி |
| Computer Graphic | - கணினி வரைகலை |
| Computer Motherboard | - கணினி தாய்ப்பலகை |
| Computer network | - கணினி வலையமைப்பு |
| Computer | - கணினி |
| Computerized data processing | - கணினிமய தரவு செயலாக்கம் |
| Configuration | - அமைவடிவம் |
| Cookie | - நினைவி |
| Copy protection | - நகல் காப்பு |
| Cursor | - சுட்டி |
| Cyber | - மின்வெளி |
| Data | - தரவு |
| Database | - தரவுத்தளம் |

| Computer Related Words | Meaning in Tamil |
|---|---|
| Decode | - குறிமுறை நீக்கு / நீக்கி |
| Decompress | - விரிவாக்கு |
| Desktop computer | - மேசை கணினி |
| Digital | - எண்மின் |
| Disk drive | - வட்டு இயக்கி |
| DNS | - கொப்பெகம் (கொ)ற்ற(ப்பெ)யர்க்(க)ட்டக(ம்) |
| Domain | - கொற்றம் / ஆள்களமையம் |
| Domain Name System | - கொற்றப் பெயர்க் கட்டகம் |
| Download | - பதிவிறக்கம் |
| Drum Plotter | - உருளை வரைவு |
| Drum Printer | - உருளை அச்சுப்பொறி |
| Drum Scanner | - உருளை வருடி |
| E-book | - மென்நூல் |
| E-governance | - மின்-அரசாண்மை |
| Electrical Signal | - மின் சமிக்ஞை |
| E-mail | - மின்னஞ்சல் |
| Encoding | - குறியாக்கம் |
| Field | - புலம் |
| File | - கோப்பு |
| File Management | - கோப்பு மேலாண்மை |
| File Share | - கோப்பு பகிர்வான் |
| File sharing | - கோப்பு பகிர்தல் |
| Firewall | - தீயரண் |
| Firmware | - நிலைப்பொருள் |
| Floppy drive | - நெகிழ் வட்டு |
| Flow chart | - நெறிமுறை விளக்கப்படம் |
| Folder | - கோப்புமுறை |
| Font and word processor | - எழுத்துருவும் சொல் செயலாக்கியும் |
| Global dashboard | - கோளக் கட்டுப்பாட்டகம் |
| Global Positioning System | - கோள இருப்பிடக் கட்டகம் |
| Hard disc | - வன்வட்டு |
| Hardware | - வன்பொருள் |
| Higher level language | - உயர்நிலை மொழி |
| Home | - முகப்பு |
| Homepage | - முகப்புப்பக்கம் |
| Host computer | - புரவலர் கணினி |
| Icon | - உருச்சின்னம் / படவுரு |
| Image | - படிமம் |
| Information Technology | - தகவல் தொழில்நுட்பம் |

| Computer Related Words | Meaning in Tamil |
|---|---|
| Install | - நிறுவு |
| Installation | - நிறுவுதல் |
| Integrated chips | - சுற்றமைப்புச் சில்லுகள் |
| Interface | - இடைமுகம்/இடைமுகப்பு |
| Internet | - இணையம் |
| Internet protocol address | - இணைய நெறிமுறை முகவரி |
| Internet protocol (IP) | - இணைய நெறிமுறை |
| Internet service provider (ISP) | - இணையச் சேவை வழங்குனர் |
| Interpreter | - வரிமொழிமாற்று இடைமாற்று |
| Keyboard | - வரிசைப்பலகை தட்டச்சுப்பலகை |
| Keypad | - விசைத்தளம் |
| Keyword | - குறிப்புச்சொல் |
| Landscape | - அகலவாக்கி |
| Laptop Computer | - மடிக்கணினி |
| LCD Monitor (Liquid Crystal Display) | - திரவ பளிங்குத் திரையகம் |
| Log in | - புகுபதி / உட்புகு |
| Log out | - விடுபதி / வெளியேறு |
| Machine Language | - பொறிமொழி |
| Machine translation | - எந்திர மொழிபெயர்ப்பு |
| Magnetic disk | - காந்த வட்டு |
| Magnetic tape | - காந்த நாடா |
| Media | - ஊடகம் |
| Media player | - ஊடக இயக்கி |
| Metadata | - தரவு விவரம் |
| Micro processor | - நுண்செயலி |
| Microphone | - ஒலிவாங்கி |
| Modem | - இணக்கி |
| Monitor | - கணித்திரை / திரையகம் |
| Motherboard | - தாய்ப்பலகை |
| Mouse | - சொடுக்கி |
| Multimedia | - பல்லூடகம் |
| Multitasking | - பல்பணியாக்கம் |
| Network | - பிணையம்/வலையமைப்பு |
| Networking | - வலைப்பின்னல் |
| Offline | - இணைப்பறு இணைப்பின் வெளியே |
| Online | - இணைப்பில் |

| Computer Related Words | Meaning in Tamil |
|---|---|
| Operating system | - இயங்குக் கட்டகம் |
| Outsourcing | - அயலாக்கம் |
| Package | - பொதி |
| Parallel processing computers | - இணைச் செயலாக்க கணினிகள் |
| Password | - கடவுச்சொல் |
| Peripherals | - உபகரணங்கள் |
| Personal Computer | - தனி கணினி |
| Plug in | - சொருகு / சொருகி |
| Pointer | - சுட்டு |
| Portable Printer | - கையடக்க அச்சுப்பொறி |
| Portal | - வலைவாசல் |
| Post | - இடுகை |
| Posting | - இடுகையிடல் |
| Print | - அச்சிடு |
| Printer | - அச்சுப்பொறி |
| Program | - நிரல் |
| Proxy Server | - பதில் சேவையகம் |
| Reference | - எடுகோளள் |
| Refresh | - புதுப்பி |
| Reset | - மீட்டமை |
| Restore | - மீளவை/மீள்வி |
| Root directory | - மூல அடைவு |
| Router | - வழிச்செயலி |
| Scanner | - வருடுபொறி |
| Screensaver | - திரைக்காப்பு |
| Search engine | - தேடுபொறி |
| Sensor | - உணரி |
| Server | - வழங்கி |
| Sessions | - அமர்வுகள் |
| Shareware | - பகிர்மானம் |
| Shutdown | - அணை / மூடு |
| Sign in | - புகுபதிகை / புகுபதிவு |
| Sign off | - விடுபதிகை / விடுபதி |
| Sign out | - வெளியேறு |
| Socket | - பொருத்துவாய் |
| Software | - மென்பொருள் |
| Software package | - மென்பொருள் பொதி |
| Sound Card | - ஒலிக்கிரமி |
| Source code | - மூலவரைவு |
| Spam | - எரிதம் |
| Spooler | - சுருளி |

| Computer Related Words | Meaning in Tamil |
|---|---|
| Spreadsheet | - விரித்தாள் |
| Stub | - குறுங்கட்டுரை |
| Super Computer | - மிகுவேகக் கணினி<br>மீக்கணினி |
| Syntax error | - தொடரமைப்புத் தவறு |
| System programmer | - கட்டக நிரலாளர் |
| Tab | - தத்தல் |
| Technology | - தொழில்நுட்பம் |
| Theroy | - தேற்றை |
| Thesis | - தேற்று |
| Toolbar | - கருவிப்பட்டை |
| Trash | - குப்பை |
| Update | - இற்றைப்படுத்து |
| Upgrade | - மேம்படுத்து/மேம்படுத்துதல் |
| Upload | - பதிவேற்று |
| URL | - (இணைய) முகவரி |
| Video blog | - ஒளிப்பதிவு |
| Video | - ஒளிதம்/காணொளி |
| Virtual server | - மெயிநிகர்ச் சேவையகம் |
| Virus | - நச்சுநிரல் |
| Voice mail | - குரலஞ்சல் |
| Voice recognition | - குரலறிதல்<br>குரல் இனங்காண்பி |
| Website | - இணையத்தளம் |
| Wireless | - கம்பியில்லா |
| Worksheet | - பணித்தாள் |
| Workstation | - பணிநிலையம் |
| World Wide Web (WWW) | - வைய விரிவு வலை |
| Web Browser | - வலை உதவி |
| Web Server | - வலைச் சேவையகம் |
| Whats app | - கட்செவி அஞ்சல் |


| Computer Related Words | Meaning in Tamil |
|---|---|
| Facebook | - முகநூல் |
| Smart Phone | - நுண்ணறிபேசி |
| Twitter | - பறவை போல் கீச்சிடு |
| Workshop | - பட்டறை |
| Conference | - மாநாடு |
| Video Conference | - காணொளிக் கலந்துரையாடல்<br>காணொளியாடல் |
| Bluetooth | - திறக்கற்றை |
| Intranet | - அகஇணையம் |
| Hyperlink | - மீத்தொடுப்பு |
| Hypertext | - மீஉரை |
| Data Mining | - தரவு சுரங்கம் |
| Mobile Computing | - நகர்வுக் கணிமை |
| Cloud Computing | - மேகக் கணிமை |
| Distributed Computing | - விரவல் கணினி |
| Green Computing | - பசுமைக் கணிமை |
| Grid Computing | - கட்டக் கணிமை |
| Parallel Computing | - இணைக் கணிப்பணி |

**தொகுப்பு**

**R.Shankar**

Assistant Professor

Department of Computer Science



## APJ அப்துல் கலாம்

மக்களின் மனதில் நின்றவரே!
இளைஞர்களின் தோழரே!
ஆசிரியர்களின் சகோதரரே!
மாணவர்களின் வழிகாட்டியே!
விண்ணை ஆளச் சென்றாயோ!
மீண்டும் மண்ணில் பிறப்பாயோ!

**தே.தேன்மொழி**
இரண்டாமாண்டு கணினி அறிவியல்

## எம்.ஜி.ஆர்



தாயின் திருமகனே!
நாட்டின் தலைமகனே!
மக்களின் மனதில் நின்றவரே!
மண்ணை ஆண்ட காலம் போதுமென்று
விண்ணை ஆட்சி செய்யச் சென்றாயோ!
மீண்டும் மண்ணில் பிறந்து மக்கள் மனதை
வெல்வாயோ!



# என்னைக் கவர்ந்த தலைவர்

# காமராசர்

**S.இலக்கியா**
மூன்றாமாண்டு கணிதவியல்

தன்னலம் சிறிதும் இன்றிப் பொதுநலம் பெரிதும் எண்ணி வாழ்நாள் முழுதும் உழைத்த பெருந்தலைவர் காமராசர் காட்சிக்கு எளியவர், கருத்துக்கு இனியவர், எண்ணற்ற தலைவர்களுள் என்னைக் கவர்ந்தவர் இவரே.

**இளமையும் கல்வியும் :**

விருதுநகரில் 15.07.1903 அன்று குமாரசாமிக்கும் சிவகாமி அம்மாளுக்கும் அருந்தவப் புதல்வராய்ப் பிறந்தவர் காமராசர். இவரது இயற்பெயர் காமாட்சி. இவர் தமது ஆறாம் அகவையில் தந்தையை இழந்தார். தாய்மாமன் ஆதரவில் குடும்பம் இயங்கிற்று. ஆறாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தபோது வறுமை காரணமாகப் பள்ளி செல்வதை விட்ட காமராசர் சில ஆண்டுகள் கடைகளில் வேலை பார்த்தார். பின்னர் அரசியலில் நுழைந்து அண்ணல் காந்தி வழியில் நாட்டு விடுதலைக்காகப் போராடலானார்.

**பதவியாசை இல்லாதவர் :**

1940இல் தமிழ்நாடு காங்கிரசின் தலைவரானார். 1941இல் இவர் வேலூர் சிறையில் இருந்தபோது விருதுநகர் நகர்மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். விடுதலையாகி வந்ததும், நாட்டு விடுதலை குறித்த வேலைகள் பல தமக்கு இருப்பதால் அந்தப் பதவி வேண்டாமென்று கூறிப் பதவி விலகினார்.

**நேர்மை தவறாதவர் :**

1966இல் அனைத்திந்திய காங்கிரசின் தலைவரானார். தமிழ்நாட்டிலும் காங்கிரசின் ஆட்சி. அப்போது கொலை வழக்கில் சிக்கிய உறவினர் ஒருவர் இவர் உதவியை நாடி வந்தார். இவரோ மறுத்துவிட்டார். அக்குற்றவாளிக்கு ஈராண்டுச் சிறைத்தண்டனை கிடைத்தது. காமராசர் இதில் தலையிடாதது கண்டு அதிகாரிகளும் பிறரும் வியந்தனர்.

**சிறந்த வழிகாட்டி :**

நலிந்து வரும் காங்கிரசை வலுப்படுத்தத் தலைவர்கள் கூடிச் சிந்தித்தபோது, மாநில முதல்வர்களும் நெடுங்காலமாய் அமைச்சராய் இருப்போரும் பதவி விலகிக் கட்சிப் பணியில் ஈடுபட வேண்டும் என்று ஒரு புரட்சித் திட்டம் தந்த காமராசர் தாமே, முதல்வர் பதவியைத் துறந்து அத்திட்டத்தைச் செயற்படுத்த வழிகாட்டினார். இதை நேருவே நாடாளுமன்றத்தில் பாராட்டினார். உலகச் செய்தித்தாள்கள் காமராசர் திட்டம் (K Plan) என்று இத்திட்டத்தைப் பாராட்டி வரவேற்றன.

**கல்வி வள்ளல் :**

இராஜாஜியின் குலக்கல்வித் திட்டத்தை எதிர்த்த காமராசர், இராஜாஜி காலத்தில் மூடப்பட்ட பள்ளிகளைத் திறந்தார். புதிய பள்ளிகளையும் ஏற்படுத்தினார். பள்ளிக்

கல்வியை இலவசமாக்கினார். அரசுப்பள்ளியில் பயின்ற மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கினார்.

**நாட்டு நலப்பணி :**

உழவும் தொழிலும் சிறக்க உழைத்த காமராசர் மணிமுத்தாறு, கீழ்பவானி, வைகை, சாத்தனூர் முதலிய பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களைச் செயல்படுத்தினார். சிற்றூர்களுக்கு மின்சாரம் வழங்கினார். நிலக்கரி, சிமெண்ட், இரும்புத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தினார்.

எளிய குடும்பத்தில் பிறந்து, படிக்காத மேதையாய்ச் சிறந்து, நாட்டு நலனையே நாளும் நினைந்து, உண்மையாய் உழைத்துப் புகழையன்றி எதையும் சேர்க்காமல் மறைந்த காமராசரைப் போற்றுவோம். நற்பணி ஆற்றுவோம்.

## A Special Friend

Sometimes in life you will find a special
friend that you can count on
Someone who changed your life
simply by being a fast of it.
Someone who makes you feel good.
Smile at will and laugh uncontrollably
Someone who will show you these are
Still some good people in the world
Someone who will stand by you, at
times when you feel you are all alone.
Someone who will make your life better
just by being a heart of their

## அம்மா

அம்மா உன் வாழ்வின் ஒரு பாதி
உன் பெற்றோருக்காய் மறு பாதி
உன் பிள்ளைகளுக்காய்
மனதார பகிர்ந்தளித்து விட்டாய்
என்றாவது உனக்காய் வாழும்
உத்தேசம் உண்டா

By,
**A.S.Krishna Veni** III B.Sc., Maths

## MOTHER

**M**ARVELOUSLY
**O**VER FLOWING WITH LOVE AND
**T**OUCHING THE
**H**EART OF
**E**VERYONE SHE
**R**EACHES



**P.Sarath Kumar**
III B.A English Lit.

## அம்மா

கருவில் இருந்த எனக்கு
சிற்பி போல்
உயிர் கொடுத்தாய்
என் தூக்கத்தில்
உன் தூக்கத்தை
தொலைத்து பாதுகாத்தாய்
கல்வி என்னும்
விளக்கை என்
கையில் தந்தாய்
இப்படி....
படைத்தல்
காத்தல்
கல்வி என
தனிதனியாக வரம் தரும்
தெய்வத்திற்கு மத்தியில்
தன் மகளுக்காக எல்லா
வரமும் வழங்கும் நீ அம்மா!...

## கலையாத கனவுகள்

முதல் நாள் கல்லூரி நாட்கள்
புதுபுது நண்பர்கள்
சின்ன சின்ன சண்டைகள்
அடுத்த நிமிடம் சிரிப்புகள்
பரபரப்பான பரீட்சைகள்
மூன்றாம் ஆண்டு இறுதி நாள்
கண்ணின் ஓரத்தில் கண்ணீர்
என்றும் நினைவில்
கலையாத கனவுகளாய்
கல்லூரி நாட்கள்...

**க.தாரணி**
கணிதவியல் மூன்றாமாண்டு

## கல்லூரிக் காலங்கள்

கல்லூரிக் காலங்கள்
கனவில் வருவதில்லை
என்றும் மறவாது
நம் நினைவில் புதைந்தது
பூக்கள் பூக்கும் போதே
நினைப்பதில்லை
தன்னை பறித்துவிடுவார்கள் என்று
அது போல
நாம் பிரியும் நேரம் பிரிவதற்கல்ல
நாம் பிரிந்தும் பல சாதனை புரிவதற்கு
கல்லூரி சொல்லும் வார்த்தை
என்னை மறக்காதே என்றல்ல
என்னை வைத்து உன்னை
மாற்றிக்கொள் என்றேதான்
நாம் கல்லூரிக்கு செல்லும் வார்த்தை
உன்னை மறக்க முடியாது என்றல்ல
என்னிடம் இருந்து உன்னை
பிரிக்க முடியாது என்று தான்...
ஏனென்றால் கல்லூரிக் காலம்
கனவுகள் அல்ல
நம் நினைவுகள்....

**M.Vishnu**
III B.Sc., Maths




**L.Guru Moorthy**
I B.Sc., Maths



C.Krishna Kumar
III BCA

## கவிதை

நினைப்பதெல்லாம்
நடப்பதில்லை...
கிடைப்பதெல்லாம்
நிரந்தரமில்லை...
அதை நீ, பொய்யாக்கிவிட்டாய்
நண்பா...
நான் நினைத்தது
நல் உறவுகள்...
கிடைத்தது
நல்ல நண்பர்கள்...
உலகத்தில் யாருக்கும் யாரும்
எதிரியே இல்லை...
மற்றவர்களின் உணர்வுகள்
புரியாத வரை...

**P.Sarath Kumar**
III B.A., English Literature

## கல்வி

திசை தெரியாது
விழி பிதுங்கும்
மனிதர்க்கு - வழிகாட்டி
கல்வி...
கல்வி - நமக்கு
கலங்கரை விளக்காய்
ஒளிரும் போது - நாம்
கடக்க வேண்டிய
தூரம் கூட
வாசற்படிதான்...

## முயற்சி

மூச்சு விடுபவனெல்லாம்
மனிதன் அல்ல -
முயற்சியை மூச்சாக்கியவனே
மனிதன்...
முயற்சியை
மூச்சாக்கினால்
சரித்திரம் உனை
சிறைபிடிக்கும்...
முயன்றுபார் - இன்னும்
ஒருமுறை - உன்
வாழ்வு
வசந்த பூஞ்சோலையாகும்!

## காவிரி நீர்



தேர் கொடுத்து
முல்லையினம்
காத்த-
தமிழினத்திற்கு
நீர்-கொடுத்து
காக்காத
கர்நாடகா இனம்....

**Dr.S.Ponnaiyan**
Asst. Professor,
Dept.of Commerce







த.லோகநாயகி
I B.Sc., வேதியியல்



# தேசிய ஒருமைப்பாடு

**சி.கவிதா**
இளநிலை மூன்றாமாண்டு
கணிதவியல்

இந்தியா ஒரு துணைக்கண்டமென்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை. இங்கே பலதரப்பட்ட மொழி, இனம் சார்ந்த மக்கள் ஆதி காலம் தொட்டு ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர். கடந்த காலங்களில் வேறுபட்ட மதம், மொழி கலாச்சார படையெடுப்புகள் இருந்தும் நமது நாடு இன்றும் ஒரே சிந்தனையில் வளர்ச்சியில் செல்வதற்கு நமது முன்னோர்களின் அரிய பங்களிப்பும் ஒருமைப்பாடும் அர்ப்பணிப்பும் தான் காரணம்.

முப்பது கோடி முகம் உடையாள் உயிர்
மொய்ம்புற வொன்றுடையாள் - இவள்
செப்புமொழி பதினெட்டுடையாள் - எனில்
சிந்தனை ஒன்றுடையாள்

ஒரே மொழி, ஒரே மதம், ஒரே ஆட்சி என்று நம்மை விட்டு பிரிந்து சென்ற பாகிஸ்தானில் இன்று நிம்மதி இல்லை.

இன்று நமக்கு ஒருநாள் முன்னதாகவே சுதந்திரம் பெற்ற பாகிஸ்தானை நினைத்துப் பார்த்தோமானால் நாம் அதிர்ஷ்டசாலிகள் தான். இந்தியா சுதந்திர நாடுதான். குடியரசுத் தலைவரைக் கூட விமர்சிக்க முடிகிற இந்தியா எங்கே? எப்போது யார் இயந்திரத் துப்பாக்கியுடன் வந்து சுடுவார்கள் என்று நிச்சயமில்லாத பாகிஸ்தான் எங்கே?

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு நம்மில்
ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வு
நன்றி தெரிந்திடல் வேண்டும் இந்த
ஞானம் வந்தால் பின் நமக்கெது வேண்டும்?

**பாகிஸ்தான்**

1956 முதல் 1958 வரை மட்டும் ஜனநாயக ஆட்சியில் இருந்தது. அதன்பின் 1972 வரை இராணுவ ஆட்சிதான். பிற்பாடு பல்வேறு கட்சிகள், அரசியல் பழிவாங்கல் படலங்கள் என்று எந்த ஆட்சியாளருக்கும் நாட்டின் வளர்ச்சிபற்றியோ, பொருளாதாரத் தொலைநோக்கு பற்றியோ அதிகம் சிந்திக்க நேரமில்லை. தற்போதைய அதிபர் நவாஸ் செரிப் கூட தன் நாற்காலி பற்றிய பயத்தோடும் தன் உயிர் பற்றிய பயத்தோடுமே காலந்தள்ளி வருகையில் பொருளாதாரமாவது, மண்ணாங்கட்டியாவது! பாகிஸ்தானிலிருந்து எத்தனை நிறுவனங்கள் உலக அளவில் பெயர் பெற்றுள்ளன. எத்தனை நிறுவனங்கள் உலகளாவிய கிளைகளை வைத்துள்ளன. உலகளவில் என்ன மதிப்பிருக்கிறது பாகிஸ்தானிற்கு? உள்நாட்டிலும் அமைதியை ஏற்படுத்த

முடியாமல், வெளிநாட்டிலும் நெருக்கடிகளுக்காளாகி அந்த நாடு வரும் காலங்களில் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகப் போகிறது என்பது மட்டும் திண்ணம்.

**நாம் இனி செய்ய வேண்டியவை :**

மறுபக்கம் இந்தப் பொருளாதார முன்னேற்றம் எல்லா அடித்தட்டு மக்களுக்கும் போய்ச் சேர்ந்திருக்கிறதா என்றால் நிலை சற்று வருத்தமாகத்தான் இருக்கிறது. இன்றைக்கும் 70 கோடிக்கு மேலானோர் தினமும் 4 டாலர் வருமானமும் அதற்குக் கீழேயும் பெரும் வறுமையில் இருக்கின்றனர். அரசிடம் இவர்களுக்கான திட்டங்கள் இருக்கின்றன. உண்மையில் இப்படிப்பட்ட மக்களுக்கான திட்டங்கள் பெரும்பாலும் இலவசங்களாகவே மக்களுக்கு அளிக்கப்பட்டன. அவற்றிலும் கைமாறிச் செல்லும் பனிக்கட்டியாய் துளி மட்டுமே அடித்தட்டு மக்களுக்குப் போய்ச் சேர்ந்தது. இங்கேயும் மீண்டும் என்னை பாரதியின் கண்ணீர் வரிகள்தான் உறுத்துகிறது.

நெஞ்சு பொறுக்குதில்லையே
இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்து விட்டால்
கொஞ்சமோ பிரிவினைகள் ஒரு
கோடி என்றால் அது பெரிதாமோ?

காவிரியில் நீர் தர மறுக்கும் கர்நாடகாவில்தான் நமது கணினி படிப்பாளிகள் அதிகம் உழைக்கின்றனர். ஆனால் நமது கடைமடை விவசாயிகள் நீர் ஆதாரம் இன்றி விவசாயத்தை விட்டு வேறு தொழில்களுக்கு மாறி வருகின்றனர். அரசியல் கட்சி வளர்க்கும் சுயநலம் மேலிட்டதால், மக்களை சுயசார்புள்ளவர்களாகவே வைத்திருக்கிறார்கள். மக்களும் அரசு இலவசமாகத் தர வேண்டும் என்ற மனநிலைக்கு வந்துவிட்டனர்.

**சுயஉதவிக் குழுக்களும் மக்கள் இயக்கமும் :**

இன்றைக்கு நிறைய இளைஞர்கள் குறுகிய காலத்தில் தேவைக்கும் அதிகமாகச் சம்பாதித்து விட்டு தன் சமுதாயத்திற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று நமைச்சலுடன் திரிகின்றனர் அவர்களை ஒருங்கிணைத்தால் ஒரு பெரிய சமுதாய பொருளாதார மாற்றத்தை இந்தியாவில் கொண்டு வரமுடியும். ஆனாலும் மாற்றம் என்பது சிறிய அளவிலான படிக்காத மக்களிடம் தான் உருவாகிறது. களஞ்சியம் என்ற அமைப்பின் நிறுவனர் சின்னப்பிள்ளை போன்ற, ஏழை என்றாலும் படிக்காத மேதைப் பெண்கள்தான் நாட்டில் மிகப்பெரிய மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளனர். புரா போன்ற இன்னபிற சுய உதவிக்குழுக்கள் இந்த மாற்றத்தைக் கொண்டு வரும் முயற்சியில் இறங்கியிருப்பதை அரசு இயந்திரம் முழு மூச்சில் என்றைக்கு தனது கொள்கையாகக் கொண்டு வருமோ அன்றுதான் இந்த இலவச எதிர்பார்ப்பு மனநிலை ஒழியும். ஒவ்வொரு குடும்பமும் தன்னிறைவுறும் மைக்ரோ பைனான்ஸ் என்கிற அருமையான உத்தி கந்து வட்டியாளர்களை விரட்டிவிடும். ஆனால் எத்தனைபேர் இன்று மைக்ரோ பைனான்ஸ் செய்கிறார்கள். எத்தனை பேருக்கு அப்படி ஒன்று இருப்பது தெரிகிறது?

**நமது கடந்த கால பாதை :**

1947-ல் சுதந்திரம் வாங்கியபின் இந்தியா 1950-ல் குடியரசாக

பிரகடனப்படுத்தப்பட்டு 57 வருடங்கள் ஜனநாயக ஆட்சி நடந்து வருகிறது. இடையில் சில காலங்கள் நெருக்கடிநிலைப் பிரகடனம் தவிர்த்து பொருளாதார முன்னேற்றம் என்று பார்த்தால் 1990க்குப் பிறகு தொடர் வளர்ச்சிதான், ஆனால் அதற்கான ஆயத்தங்கள் 1980களிலேயே ஆரம்பித்துவிட்டது என்றால் பொய்யில்லை. வெகு காலத்திற்கு, யானை போன்ற இந்தியா படுத்தே இருந்ததால் பல நாடுகள் இந்தியாவைப் பொருட்படுத்தத் தேவையில்லை. ஆசியான் அமைப்பின் பாங்காக் அறிவிப்பில் கூட இந்தியாவை குட்டியூண்டு நாடுகள் பொருட்படுத்தி அழைக்கவில்லை. 1990-களில் நமது அரசாங்க முயற்சியின் விளைவால் இந்தியாவை ஒரு புதிய பாதையை நோக்கி செலுத்தத் தொடங்கியபோது படுத்திருந்த யானை எழுந்தாற்போல இருந்தது. இன்றைக்கு இந்தியாவைப் பற்றி சிந்திக்காத, பேசாத, பொருளாதார அரசியல் வல்லுநர்கள் இல்லை. அதாவது யானை தரையதிர ஓடத்தொடங்கியிருக்கிறது. அனைவரும் திரும்பிப் பார்க்கிறார்கள்.

இந்தியா சுதந்திரமடைந்து, அதாவது, தன்னாட்சி பெற்று அறுபது ஆண்டுகள் நிறைவுறுகிறது. சுதந்திரத்திற்காக போராடியோர்கள் தள்ளாடும் வயதைக் கடந்து கொண்டிருக்கும் வேளையில் சுதந்திரத்தைப் பற்றி உணர்ச்சியூட்டும் வகையில் எழுதப்பட்ட வரலாறுகளை மட்டுமே படித்த இளைஞர்கள் மற்றும் பேரிளைஞர்கள் கூட்டம் உள்ள நாடாக இந்தியா உள்ளது. இந்தியாவில் இருந்து புற்றீசல்போலப் புறப்பட்டு உலகெங்கும் சென்ற இந்தியர்கள் பணத்தை மூட்டையாகக் கட்டிக்கொண்டு பலநாட்டு நிறுவனங்களை வாங்கிக் குவிக்கும் இந்திய நிறுவனங்கள், உலகிலே மிகப்பெரிய எண்ணெய் சுத்திகரிப்பாலையை நிர்மாணிப்பது, உலகின் மிகப்பெரிய ஜனநாயத்தில் எலக்ட்ரானிக் முறையில் ஓட்டுப்போடுவது இன்னமும் பல மேற்கத்திய நாடுகள் பேப்பரில் தான் ஓட்டுப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். எகிறும் நில மற்றும் கட்டிட விலைகள், என்று ஒரு பக்கமும், மறுபக்கத்தில் தீரவே தீராத காஷ்மீர் பிரச்சனை, சரியான சாலைகள் பாலங்கள் அமைந்திராத கிராமங்கள், ஆந்திராவில் நக்ஸலைட்கள் அஸ்ஸாமின் உல்பா மற்றும் இன்னபிற மத தீவிரவாத அமைப்புகள், இன்னமும் வறுமைக்கோட்டில் இருக்கும் மக்கள் மாநிலங்களுக்கிடையேயான நதி நீர்ப்பங்கீட்டுப் பிரச்சனை மற்றும் ஏனைய பிரச்சனைகள் என்று கதம்பமாக சவால்கள் நிறைந்த இந்தியாவின் எதிர்காலம் நமது ஒற்றுமையில் தான் உள்ளது.

கங்கை நதிப் புறத்து கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறுகொள்ளுவோம்
சிங்க மராட்டியர்தம் கவிதை கொண்டு
சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்.

என்ற பாரதியின் வரிகளில் அமைந்த தீர்க்க தரிசனம் தான் நம்மை அமைதியாக வாழ வைக்கிறது. சுதந்திரக் காற்றை சுதந்திரமாகவும் பெருமையுடனும் அனுபவித்துக் கொண்டிருக்கும் அனைத்து இந்திய சகோதர சகோதரிகளுக்கும் தேசிய ஒருமைப்பாடு என்ற ஒன்று தான் இன்று சோறு போடுகிறது. என்று சொன்னால் மிகையில்லை.

## கேள்விக்குறி...

விலையில்லா...
விளைச்சலுக்கு...
துவண்டு போகாத
விவசாயி...
மண்ணைச் சுவைத்து...
மார்போடு புரண்ட
அவனது பூமி...
இன்று
சுக்கு நூறாய்ப்போனது...
வறட்சியால்...
இதயமும் சேர்த்துதான்...
அதிர்ச்சி மரணங்கள்...
தற்கொலைகள்...
பொய்த்துப்போன மழை...
அரசியல் சூழச்சியால்...
வறட்சி மாநிலம்...
என்ன கொடுமை..
இன்று... உயிர்
காக்கப்படாத விவசாயி...
நாளை
காக்கப்படுமா...??
விவசாயம்...??
யார் ஜெயில்...
இது...
யார் செயல்...?

## பெண் கொடுமை

வயது
வித்தியாசம்
பாராமல்
பாலியல்
வன் கொடுமை...
இது...
சமூக அவலமா?
இயக்கப்படாத..
சட்டங்களா?
ஆம்... எனில்
பெண்ணடிமை...
தீரவில்லை...
பெண்...
வரமா? சாபமா?




## ஜல்லிக்கட்டு

இரவும்.. பகலும்
பாராமல்...
அலைபேசியின்...
வெளிச்சத்தில்
கைகோர்த்து...
கடற்கரை மணலில்
பாத்திகட்டி...
ஒற்றுமை எனும்
விதையிட்டு...
அகிம்சை எனும்
நீர்பாய்ச்சி...
சாதி மதம் கலந்த
உரமிட்டு
பண்பாடு... காக்கப்
பயிர் செய்தான்...
இளைஞன்...
ஜல்லிக்கட்டு...
எனும் அறுவடைக்காக!!!



**இரா.சங்கர்**
உதவிப் பேராசிரியர்
கணினி அறிவியல் துறை

## உலக சமாதானம்





**பூ.நந்தகுமார்**
முதுநிலை
இரண்டாமாண்டு வேதியியல்

மாவட்ட அளவில் முதல் பரிசு பெற்ற கவிதை

# திண்ணிய நெஞ்சம் வேண்டும்

சாலையில் பூக்கள் பூத்திருக்கும்
நடுவே என் உறவுகளும் படுத்திருக்கும்
சாதாரண மக்களா அவர்கள்
யார் இவர்களை மாற்றியது?
சரித்திரங்களே ஏமாற்றியது - என்று
சபைகளில் முழக்கம் எழ வேண்டும்
நமக்கும் திண்ணிய நெஞ்சம் வேண்டும்!...

வயலில் ஓரம் பார்த்தால்
வாடிப்போனது விவசாயம் அல்ல
வற்றிப்போனது கிணறும் அல்ல
வறண்டுபோனது விவசாயியின் வயிறு!...
உணவைக் கொடுக்கும் விவசாயி
உணவில்லாமல் உறங்கினான்
உதாசினப் படுத்தும் அதிகாரிகள்
உருண்டு விழுந்து சிரிக்கிறான்!...

அங்கோ போர்முனையில் இராணுவ வீரன்
உரிமைக்காக அழுகிறான்...
இங்கோ மனைவி மடியில் கணவன்
உறவுக்காக அழைக்கிறான்...!
தட்டிக் கேட்க ஆள் வேண்டும்
நமக்கும் திண்ணிய நெஞ்சம் வேண்டும்...!

வீரம் என்பது வர்த்தையும் இல்லை
கர்வம் என்பது ஆணவத்தின் எல்லை
களத்தில் இறங்கி போர்புரிய
திண்ணிய நெஞ்சம் வேண்டும்!...

வாழ்க்கைப் பயணம் வெறுக்கும் போதும்
வாய்ப்புகள் மெல்ல விலகும் போதும்
வார்த்தைகள் நம்மை இழக்கும் போதும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்!...

ஓங்கி உயர்ந்து வாழ்வதற்கும்
ஒய்யார மேடையில் நிற்பதற்கும்
உயர்ந்த நடை போடுவதற்கும்
உயரப்பறக்கும் உயிரினத்துக்கும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்!...
உறவுகள் பலிக்கும் வார்த்தை கேட்க
ஊமையாகவே என்றும் இருக்க
பரந்த மனப்பான்மை வேண்டும் - அதற்கும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்!...

கல்விக்கூட வயதில் தொழிற்கூடம்
குழந்தைகளோ தவிக்குது அன்றாடம்
தட்டிக்கேட்க ஆள் வேண்டும் நமக்கும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்!...

தீண்டாமை செய்பவன் சிறையில் உள்ளான்
தீண்டத்தகாதவன் வெளியில் உள்ளான்
வரிகளில் மட்டுமே சுதந்திரம்,
வாழக்கையில் எவனுக்கு உண்டு!...

வெற்றுப்பேச்சு பேசாமல் - நாட்டின்
வெற்றிக்காகப் போராட
மக்கள் வரிசையில் வர வேண்டும்
மனிதா!
நமக்கும் திண்ணிய நெஞ்சம் வேண்டும்!...

**ப.விஜயராஜ்**
இளநிலை முதலாமாண்டு வேதியியல்

## எனக்கு மட்டும் சிறகு முளைத்தால்

வெண்ணிலவைச் சுற்றி வட்டமிட நினைப்பேன!
இமய மலையின் உச்சியை தொட்டுத் தொட்டு சிரிப்பேன்!
வானத்தின் அழகை நிமிர்ந்து நின்று பார்ப்பேன்!
வானுலகு முழுமையும் தன்வசம் ஈர்ப்பேன்!



மரங்களில் மண்டியிட்டு ஏறும்
மனிதர்களுக்கு மத்தியில்
மனிதப் பறவையாய் - இந்த
மானிடன் பறப்பேன்!

கருங்கற்களை கைகளால் தூக்கிக் கொண்டு
கழுகு பருந்துகளையும் கைகளால் வென்று
வாழ வழி இல்லாதவர்களுக்கு
வானத்தில் இலவச வீடுகள் அமைப்பேன்!

எனக்கு மட்டும் சிறகு முளைத்தால் - இந்தியாவின்
செயற்கைக் கோள்களை எல்லாம்
சிரமம் பார்க்காமல் என் கைகளால்
சீக்கிரம் கொண்டு செல்வேன்!

வாழ்க்கையையே வானத்தில்
விட்டுக் கொடுத்த
கல்பனா சாவ்லாவுக்கு
வானத்தின் வழியிலே சிலை அமைப்பேன்!

வானத்தில் மிதக்கும்
விண்மீன்களைக் கொண்டு வந்து
வாசல்தோறும் இலவச
மின்விளக்குகள் அமைப்பேன்!

புதுமை பூமியை
புனிதமுறச் செய்ய
புதுமை மனிதனாய் - நானும்
பறப்பேன்! பறப்பேன்! பறந்து கொண்டே இருப்பேன்!

**ப.விஜயராஜ்**
இளநிலை முதலாமாண்டு வேதியியல்

## அம்மா



அம்மா! அம்மா! அம்மா!

அன்னை வயிற்றிலிருந்து வெளியேறி
பூமியில் ஜனித்தவுடன்
அறிமுகப்படுத்தாமலே எல்லா
ஜீவன்களும் பேசும் வார்த்தை

அம்மா! அம்மா! அம்மா!

தாய் மொழியாம் தமிழ்மொழி எமக்கு
தாலாட்டாய் அறிமுகமானது
நானறிந்த முதல் தெய்வம்
என் அம்மா
பிறந்த நாளிலிருந்து இந்த உலகத்தை
அறிந்துகொள்ள என் முதல் குரு
என் அம்மா
எத்தனை வயதானாலும்
எத்தனை பட்டங்கள் நான் பெற்றாலும்
எல்லாவற்றிற்கும் மேலானாள்
எப்பொழுதும் என் அம்மா! அம்மா....!

**R.நிவாஸினி**
M.Com I Year

## அன்பு



உனக்கு பிடிக்கும் பலரிடம்
பழகுவதை விட
உன்னை பிடிக்கும்
ஒருவரிடம் பழகிப்பார்
உன்னையே நீ முழுமையாக
அறிந்து கொள்வாய் ....

**க.ஜாஸ்மின்**
இளநிலை
முதலாமாண்டு கணிதம்

## அம்மா

என் பலநாள் கனவு கல்லூரி
ஆனால் முதல் நாள் இன்று
பல கனவுகளை சுமந்து சென்றேன்
அன்று முதல் சுமைகளைத் தூக்கும்
சுமையாக மாறினேன் நான்
சுமைகளே சுகமானது.

**அர.முருகேசன்**
இளநிலை முதலாமாண்டு கணிதம்

## அம்மா

கருவாய் சுமந்து
உருவைத் தந்தவளே - எனை
உலகம் பார்க்க வந்தவளே!
என் கை விரலில் கவி வளர
கற்றுக் கொடுத்தவளே!
உயிரின் நிழலாய், உலாவரும் பூங்காற்றாய்
நீ இருந்தாய்!
உலகிற்கு சேனாதிபதியானாலும் உனக்கு
நான் சேவகனாய் இருப்பேன்
என் வாழ்க்கைக் கோயிலில் அணையா ஜோதியாய்
அத்தனைக்கும் நான் எப்படி
செய்வேன் நன்றிக்கடன்

**க.சரண்யா**
இளநிலை முதலாமாண்டு கணிதம்

## தாய்

உலகிற்கு என்னை அறிமுகப்படுத்தியவளே
நான் அழுத போது
தாவி அனைத்துத் தாய்ப்பால் ஊட்டியவளே
ரத்தத்தைப் பாலாக மாற்றும்
வித்தையை எங்கே கற்றாய்?
நான் பூமியில் கால் வைத்து
நடந்தபோது
சொர்க்கத்தில் மிதந்தவளே,
அன்பிற்கு உருவம் இல்லை
யார் சொன்னது? தாயே அன்பு
தெய்வம் பேசி நான் பார்த்தது இல்லை
உன்னை பார்க்காத வரை

**மை.அருள்நிவேதா**
இளநிலை முதலாமாண்டு கணிதம்

## உழைப்பு

படுத்துக் கிடந்தால் பகல்கூட
இரவுதான்
எழுந்து உழைத்தால் உலகமே
உனக்கு பிறகு தான்..!
அல்லும் பகலும் உழைத்தவன்
அயர்ந்து தூங்குகிறான்
அடுத்தவனை ஏமாற்றி உழைத்தவன்
அரிவாளோடு தூங்குகிறான்..!

**ம.அஜீத்குமார்**
இளநிலை முதலாமாண்டு கணிதம்

## நட்பு

தேசிய மலர் தாமரை
காதல் மலர் ரோஜா
நட்பிற்கு ஏன் மலரில்லை
ஏனென்றால் நட்பு வாடுவதில்லை!!
உயிர் கொண்ட நம் நட்பிற்கு
மரணமில்லை!!!

## காதல்

உன்னை எதிரில் பார்த்த
நாட்களை விட!
உன்னை எதிர்பார்த்த
நாட்கள் தான் அதிகம்!!
இன்னும் உன்னை எதிர்பார்க்கிறேன்
எதிரில் பார்க்க!!

**S.கதிர்வேல்**
இளநிலை முதலாமாண்டு கணிதம்

## அம்மா

நான் உன்னை நேசித்தேன்
நீ என்னை நேசித்தாய்
கடவுள் உன்னை நேசித்தான்
நான் தனிமரம் ஆனேன்

**ரா.கணேசன்**
இளநிலை முதலாமாண்டு கணிதம்

## கடல்

கடலில் இருப்பது உப்பு
நம் மனதில் இருப்பது நட்பு
கடலில் இருப்பது அலை
கடல் கரையில் இருப்பது
நண்டு வலை
கடலில் வாழும் யாவும் கரையில்
வந்தே சாகும்.

**சு.ராஜ்குமார்**
இளநிலை
முதலாமாண்டு கணிதம்

## வறுமை

காந்தி உழைத்தார் நாட்டுக்கு
நாடே உழைக்குது
அவர் நோட்டுக்கு

## நட்பு

நண்பா நீ என்
கல்லறையில் அழுதுவிடாதே
எழுந்தாலும் எழுந்துவிடுவேன்
உன் கண்ணீரைத் துடைப்பதற்கு!

**M.கோபி**
II B.Sc Chemistry

## நட்பு

என் இதயத் தோட்டத்தில்
எப்போதும் நீ மட்டுமே பூத்திருப்பாய்...
நட்பு என்னும் மலராய்...!

## வாழ்க்கை

வாழ்க்கை பிடிக்கவில்லை என்றால்
தற்கொலை செய்துகொள்...!
தற்கொலை செய்துகொள்ளும் அளவிற்கு
தைரியம் இருந்தால்...!
பிடிக்காத வாழ்க்கையை வாழ்ந்து பார்...!

**ப.கோகுல்நாத்**
II B.Sc Chemistry

DIVINELY AND
AMAZINGLY
DESIGNED

**A.S.Krishnaveni**
III B.Sc Maths

## காதல்

என் காதலை
சொன்ன விதம் தவறா?
ஒரு பதில் சொல்லி விடு...
மௌனத்தால் மட்டுமே
பேசாதே...
உன் மௌனம்
அமிர்தம் தான்...
ஆனால் அளவுக்கு
மிஞ்சினால்
என்னுயிர் தாங்காது!...
மழைக்காக காத்திருக்கும்
உழவனைப் போல்...
உன் வார்த்தைக்காக
காத்திருக்கிறது என் இதயம்...
கொளுத்தும் வெயிலை விட
அதிகமாக சுடுகிறது
உன் மௌனம்...
வார்த்தை மழைத்துளியால்
மனதை நனைக்கக் கூடாதா?
உன்னை பிரிவதும்
உயிரை பிரிவதும்
ஒன்றுதான்...
ஏழு கடல் தாண்டினாலாவது
கிடைக்குமா?
உன் உதடுகளை
திறக்கும் சாவி...

இரும்பு கூட
நெருப்பால் இளகும்...
உன் இதயம்
எதனால் இளகும்?
என் தவிப்பு உனக்கு
சாதரணமாக இருக்கலாம்...
ஆனால், உன் மௌனம்
எனக்கு சாகும்
ரணமாக இருக்கிறது...
உதட்டு சாயத்திற்கு பதில்
இதழ்களில் மௌனத்தையே
பூசியிருக்கிறாய்...
நான் பாறையல்ல
உன் மௌன உளியை
பொறுத்துக் கொள்ள...
ஒன்று மட்டும்
தெரிந்து கொள்...
உன்னை மறந்துவிட ஒரு
நொடி கூட ஆகி விடாது...
ஆனால், அந்த ஒரு நொடி
என் ஆயுளில்
இல்லவே இல்லை!...

**R.கிருத்திகா**
III B.Com A



# இனியொரு விதி செய்வோம்!

**ரா.ராஜ்குமார்**
இளநிலை முதலாமாண்டு வேதியியல்

"ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா! உறுதிகொண்ட நெஞ்சினாய் வா வா வா!"

என்று அறைகூவி அழைத்தான் பாரதி. பாரத நாட்டில் மலிந்து கிடந்த பழைய பிற்போக்கான எண்ணங்களைக் களைய வேண்டும். என்ற எண்ணத்தால் பாரதி இளைஞர்களை அழைத்தார். இன்றைய பாரதமும் கிட்டத்தட்ட அதே நிலையில்தான் இருக்கின்றது. சாதி, மத, மோதல்களும், சமுதாய ஏற்றத் தாழ்வுகளும் குற்றங்களும் சுற்றிலும் சூழ்ந்து நிற்கின்றன. நாட்டின் அமைதியும் பொருளாதார வளர்ச்சியும் கேள்விக்குறியாகிவிட்டது. இந்நிலையில் இனி ஒரு விதி செய்ய வேண்டியதன் அவசியம் உள்ளது. அதைக்கூறும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

**சமுதாய ஏற்றத்தாழ்வுகள் :**

சமுதாயம் பலவிதமான ஏற்றத்தாழ்வுகளால் பிளவுபட்டுக் கிடக்கிறது. வருவாய் ஏற்றத்தாழ்வுகள் இன்றைய சமுதாய ஏற்றத்தாழ்வுகளில் பெரும்பங்கு வகிக்கின்றன. ஏழைகளுக்கும், செல்வந்தர்களுக்கும் இடையில் இடைவெளிகள் அதிகம் காணப்படுகின்றன. செல்வந்தர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புகளும் வசதிகளும் ஏழை எளியவர்களுக்கு மறுக்கப்படுகிறது. சமுதாய மரியாதைகள் பணம் பக்கம் சரிந்து கிடக்கின்றன. அதுபோலவே கற்றவன் - கல்லாதவன் என்ற ஏற்றத்தாழ்வுகளும் சமுதாயத்தில் கால்பதிக்கத் தொடங்கி விட்டன. இத்தகைய ஏற்றத்தாழ்வுகளால் சமுதாயம் தீய விளைவுகளை மட்டுமே எதிர் கொண்டு வருகின்றது.

இந்தியா சமீபகாலமாக சந்தித்து வரும் மோதல்களில் சாதி மோதல் முக்கியப் பங்கு வகிக்கிறது. மக்களிடையே சாதிச் சங்கங்களைப் போல மத அமைப்புகளும் தோன்றத் தொடங்கிவிட்டன. இது போன்ற மத அமைப்புகளின் போராட்டங்கள் மனித நேயத்திற்கு சவால்விடுவனவாக உருமாறிவிடுகின்றன. அன்பையே போதித்த மதங்களை மறந்துவிட்டு மனிதன் ஆயுதங்களை நம்பி கை காலை இழக்கின்றான். பல வேளைகளில் உயிரையும் இழக்கின்றான்.

**அழிவுப் பாதையில் அரசியல் :**

மக்களை நெறிப்படுத்தி நாட்டின் பிரச்சனைகள் அனைத்தையும் அமைதியான முறையில் தீர்த்து வைக்க வேண்டிய கடமை அரசாங்கத்திற்கு உள்ளது. ஆனால், இன்றைய அரசியல்வாதிகளின் கைகளிலுள்ள அரசுகள் மக்களுக்கு எவ்வித நன்மைகளையும் செய்வதில்லை. மாறாக நாட்டில் பெரும் பிரச்சனைகள் பல உருவாவதற்கும், துறைதோறும் மோசடிகள் பல தோன்றுவதற்கும் இன்றைய அரசியல்வாதிகள் காரணமாக இருந்து வருகிறார்கள். இதனால் தொடர்ந்து நாட்டின் வளர்ச்சி வீழ்ச்சிப் பாதையில் சென்று கொண்டு இருக்கின்றது. நாட்டுக்காக தன் நேரத்தில் ஒரு நொடியைக் கூட செலவிடும் அரசியல் தலைவர்களைக் கூட இன்று காண முடியவில்லை.

**பெருகும் குற்றங்கள் :**

நாட்டின் அனைத்துத்துறை புள்ளி விவரங்களும் தொடர்ந்து உயர்ந்து கொண்டே இருக்கின்றன. வளர்ந்து வரும் நாடான நமது நாட்டின் மக்கள் தொகை ஓரளவு

கட்டுப்பாட்டிற்குள்தான் இருக்கின்றது. கல்வியறிவு பெற்றவர்கள் மற்றும் கணிப்பொறி அறிவு பெற்றவர்கள் என நாள்தோறும் பெருகிவரும் புள்ளி விவரங்களையும் நம் நாட்டில் காண முடிகின்றது. இவற்றிற்கு ஈடாக கொலை, திருட்டு, கொள்ளை போன்ற கொடூர சம்பவங்களைப் பற்றிய புள்ளி விவரங்களும் அதிகரித்து வருவதுதான் நாட்டின் வளர்ச்சிக்கும் அமைதிக்கும் பெருங்கேடாக உள்ளது.

**இன்றைய சமூகத்தின் கடமை :**

இன்றைய இளைஞர்கள் நாளைய நாட்டின் பிரதிநிதிகளாகவும், குடிமக்களாகவும், தலைவர்களாகவும் வரக்கூடியவர்கள். நாளைய பாரதத்தின் வளர்ச்சியை தீர்மானிக்கப் போகும் இவர்கள் நாட்டின் இன்றைய அநீதிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முயல வேண்டும். இளைஞர்கள் நாட்டின் இரும்புத்தூணைப் போன்றவர்கள். இவர்கள் தங்கள் வலிமையை நாட்டின் வளர்ச்சிப் பக்கம் திருப்பி விட வேண்டும். சமுதாயத்தில் அவ்வப்பொழுது ஏற்படும் விரக்தியான செயல்கள் மீது நாட்டம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

**தியாகமே இன்றைய தேவை :**

"என்னிடம் நூறு இளைஞர்களைக் கொடுங்கள், நான் வலிமையான பாரதத்தை உருவாக்கிக் காட்டுகின்றேன்" என்றார் சுவாமி விவேகானந்தர். இளைஞர்களின் மீது அவர் அளப்பரிய நம்பிக்கை கொண்டிருந்தார். அத்தகைய பெரியவர்களின் கனவை நனவாக்க வேண்டியது இன்றைய இளைஞர்களின் கடமை அல்லவா? ஆதலால் இளைஞர்கள் தேசத்தின் ஒற்றுமையினைக் காக்கவும், வேற்றுமையினைக் களையவும் தங்களைத் தியாகம் செய்ய தயாராக இருக்க வேண்டும்.

தியாக மனப்பான்மை கொண்ட சமுதாயம் உருவாகின்ற பொழுது நாட்டில் புரட்சி எண்ணங்கள் மறைந்து சீர்திருத்தங்கள் மேலோங்கிவிடுகின்றன. மாறாக, சுயநலம் கொண்ட சமுதாயம் வளரும் பொழுது நாட்டில் வன்முறையை மையமாகக் கொண்ட புரட்சிகள் உருவாகிவிடுகின்றன. எனவே, இளைஞர்கள் நாட்டின் சூழலை உணர்ந்து வீதிதோறும் தியாகம் செய்ய விதி வகுக்க வேண்டும்.

பாரதம் பழம்பெருமை மிக்கது. மிகப் பழமையான பாரம்பரியம் கொண்டது. ஆனாலும் சாதி, மத, இன, மொழி மோதல்கள் அச்சுறுத்தலை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. எனவே, இளைஞர்கள் இவற்றைக் களைய தியாக மனத்தோடு முன்வந்து இனி ஒரு "விதி" செய்ய வேண்டும். அப்பொழுது நாட்டின் இன்றைய "தலைவிதி" மாறி சீரிய பாதையில் செல்லும்.

---


## மரங்கள்

இயற்கைக்கு மறுபெயர் மரம்!
செழுமையின் பசுமைக்கு அர்த்தமே மரம்
வானத்தில் இருந்து மழைநீரைத்
துளித் துளியாய் இந்தப் பூமி
வந்து அடைந்து பசுமையாகவும் - இந்தப்
பாரதத் திருநாட்டைச் செழுமையாகவும்
இருக்கும் ஒரே உயிர் மரம்!
இந்நாட்டில் மனிதர்களுக்கு - ஒரு
உயிர் மட்டுமல்ல! தன்
சுவாசக் காற்றாய் இருக்கும் மற்றொரு
உயிரும் மரமே!!

## நட்பு

ஆயிரம் கோடி விண்மீன்கள்
வானத்தில் இருந்தாலும் - அதை
யாரும் எண்ண முடிவதில்லை!!!
ஆனால் - இன்றுமட்டுமல்ல
என்றென்றும் எங்களின் நட்பு
அழியப்போவதுமில்லை
மாறப்போவதுமில்லை!!!

**தே.தேன்மொழி**
இரண்டாமாண்டு கணினி அறிவியல்



# படகோட்டி மகன் ராமசாமி

**ப.விஜயராஜ்**
இளநிலை முதலாமாண்டு வேதியியல்

கடலோர மாவட்டமான கடலூர் மாவட்டத்தில் பஞ்சத்துக்குப் பெயர்போன ஊர் நெத்திலிக் குப்பம். ஊரை சுற்றி தண்ணீர் இருந்தாலும் வறண்ட பாலைவனம் தான் நெத்திலிக் குப்பம். நெத்திலிக் குப்பம் ஊரார் வேலையானது 6 மாதம் மீன் பிடிப்பதும் அடுத்த மாதம் ஊர் ஊராக அடுத்த வேலைக்குக் கையேந்துவதுதான் இந்த ஊர் மக்களின் பிழைப்பு. இந்த ஊரிலிருந்து பலரும் வெளியூருக்குப் போய்விட்டனர். வெள்ளத்திலும், புயலிலும் பாதி வீடுகள் அடித்துச் செல்லப்பட்டது போய், மீதி உள்ள ஒரு சில வீடுகளும் வெறிச்சோடிக் காணப்படும். ஆனால் நெத்திலிக் குப்பம் கடற்கரை ஓரப்பகுதியில் ஒருவரது படகு மட்டும் பாடல் சத்தம் கேட்டபடி வலம் வந்து கொண்டிருக்கும். அந்த படகுதான் ராமசாமியின் படகு. ராமசாமிக்கு மனதில் எம்.ஜி.ஆர் என்ற நினைப்பு. பாட்டு பாடிக்கொண்டு எப்போதும் கடலில் வலம் வந்து கொண்டேயிருப்பார்.

ராமசாமியின் வயது 41 திருமணம் ஆகாதவர். இவர் திருமணம் செய்துகொள்ளாததற்குக் காரணம் திருமணமானால் நாமும் பிழைப்புக்காக வெளியூருக்குக் குடிபெயரும் நிலைமை வந்துவிடுமோ என்பதுதான். வயதான அவரது தாயை கவனித்துக் கொள்ளும்படி மனைவி அமையுமா என்ற கவலையும் அவருக்கு உண்டு. ராமசாமியின் படகில் கொட்டியளத்தான் என்னும் பெயர் எழுதப்பட்டிருக்கும். அது அவருடைய அப்பாவின் பெயர். அவருடைய அப்பா வாழ்ந்தபோது நெத்திலிக் குப்பத்திலிருந்து தான், மற்ற ஊர்களுக்கு மீன் ஏற்றுமதி செய்யப்படும். அப்போது கொட்டியளத்தானுக்கு நிறைய படகுகள் இருந்தது. கொட்டியளத்தான் குடும்பம் பரம்பரையாக மீன் பிடிக்கும் தொழில் செய்து வருகிறார்கள். கொட்டியளத்தானும், ஊர்மக்களுக்கு படகுகளை எல்லாம் மீன்பிடிக்கக் கொடுத்து, வரும் லாபத்தில் கூலியாட்களுக்கும், கொட்டியளத்தானுக்கும் பகிர்ந்து கொள்வர். மீதமுள்ள மீன்களை எல்லாம் ஊருக்காக இலவசமாக வழங்குவார். அதனால் தான் இவருக்கு கொட்டியளத்தான் என்னும் பெயர் வந்தது. இவரின் உண்மையான பெயர் ராமசாமிக்குக் கூட தெரியாது.

ஒரு நாள் என்றைக்குமில்லாமல் படகுகளில் மீன்கள் குவியல் குவியலாக பிடித்து வந்து கொட்டப்பட்டது. கொட்டியளத்தானுக்கும், நெத்திலிக் குப்பம் மக்களுக்கும் இதுபோல் மீன் குவியல்களை இதற்குமுன் பார்த்ததில்லை. மீன்களை எல்லாம் வண்டிவண்டியாக மார்க்கெட்டுக்கு அனுப்பி வைத்து விட்டு ஏலத்துக்குச் சென்றார். ஏலத்தில் கொட்டியளத்தானின் மீன்கள் மட்டுமே எப்போதும் அதிக ஏலத்துக்குப் போகும். அதுபோலவே ஏலத்தில் அன்று கொட்டியளத்தானுக்கு 1,20,000 ரூபாய்க்கு ஏலம் போனது. அன்று 1,20,000 என்பது இன்று பல லட்சங்கள் மதிப்புடையது. பணத்தை வாங்கிக்கொண்டு சந்தோசத்துடன் வீர நடை போட்டார். வழியில் பசியாக இருந்ததால் டீ கடையில் டீ குடித்துவிட்டு போகலாம் என்று கடைநோக்கி சென்றார். பணப்பையை அருகில் இருந்த பெஞ்சில் வைத்துவிட்டு டீ குடித்தார். டீ குடிக்கும் போதே கொட்டியளத்தானுக்கு பணத்தை எல்லாருக்கும் சரிசமமாக பிரித்து கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றிக் கொண்டே இருந்தது. டீ கடைக்காரரிடம் சில்லரையைக் கொடுத்துவிட்டு அருகில்

வைத்திருந்த பணப்பையைப் பார்த்தார். நேர்ந்தது அநியாயம்! பணப்பையைக் காணவில்லை. சுற்றிலும் தேடியும் பணம் வைத்திருந்த பையே இல்லை. அருகில் இருந்தவர்களிடம் எல்லாம் கேட்ட போதும் யாரும் தெரியாது என்று கூறிவிட்டனர். வேறுவழி இல்லை என்ற நிலையில் மீளாத் துயரத்தோடு வீட்டை நோக்கி மெலிந்த நடை போட்டார். நம்மை நம்பியிருக்கு நமது ஊர்மக்களுக்கு என்ன சொல்வதென்று அறியாமல் அழுதுவிடக் கூடிய நிலையில் நடந்து கொண்டிருந்தார்.


ஊர் மக்கள் அனைவரும் சாப்பிடாமல் கூட கொட்டியளத்தான் வருவதை எதிர்பார்த்து காத்திருந்தார்கள். கூட்டத்தில் இருந்து ஒரு குரல்... கொட்டியளத்தான் வந்துவிட்டார் என்று. ஊர் மக்கள் மகிழ்ச்சியோடு கொட்டியளத்தானிடம் சென்று ஐயா! ஏலத்தில் நம்முடைய மீன்கள் எவ்வளவு ரூபாய்க்கு ஏலம் போனது? என்று கேட்டனர். கொட்டியளத்தானுக்கோ நம்முடைய மக்கள் நம்முடைய நிலைமைய புரிந்து கொள்வார்கள் என நம்பிக்கை வைத்திருந்தார். கொட்டியளத்தான் ஏலத்தில் நம்முடைய மீன்கள் அனைத்தும் மொத்தம் 1,20,000 ரூபாய்க்கு ஏலம் போனது என்றார். அதைக்கேட்ட அனைவரும் சந்தோசத்தின் உச்சத்திற்கு சென்றனர். ஆனால் தயங்கிக் கொண்டே கொட்டியளத்தான் டீ கடையில் நடந்த சம்பவத்தைக் கூறினார். அதைக்கேட்ட அனைவரும் அதிர்ச்சியடைந்தனர். சிலர் கொட்டியளத்தான் சொல்வதை நம்பவில்லை. இவரே பெரிய தொகையாக இருப்பதால் எடுத்துக்கொண்டாரோ என்று சந்தேகம் அடைந்தனர். பலரும் இவரை கண்டித்தும், இவரே பணத்தை எடுத்து வைத்துக் கொண்டு நாடகம் ஆடுகிறார் என்றும் பழித்தனர்.


ஊரில் பஞ்சாயத்து நடக்க ஏற்பாடு செய்தனர். பஞ்சாயத்தில் கொட்டியளத்தான் ஏலத்தில் 1,20,000 ரூபாய் வாங்கியது நிரூபிக்கப்பட்டது. ஆனால் கொட்டியளத்தான் நடந்ததை கூறியும் யாரும் நம்பவில்லை. பஞ்சாயத்துத் தீர்ப்பில் கொட்டியளத்தான் பணத்தை திரும்ப தரும் வரைக்கும் அவரது படகுகளை வைத்து தனியாக மீன்பிடிக்க செல்லவும், என்று உத்தரவிட்டனர். கொட்டியளத்தானுக்கு சில மாதங்கள் அவகாச காலமும் கொடுத்தனர். கொட்டியளத்தானின் கவலை எல்லாம் நாம் இந்த ஊருக்கு எவ்வளவோ செய்திருந்தும் தன்னை நம்பவில்லையே என்பதுதான். இந்தக் கவலையே அவரை நோய்வாய்ப்படும் நிலைக்குத் தள்ளியது பாரம்பரியமாக நம் வம்சத்தினர் கட்டிக்காத்து வந்த படகுகள் எல்லாம் நம்மால் பறிபோய்விட்டதே என எண்ணி எண்ணி மனம் உடைந்தார். அவர்கள் பணத்தை திரும்ப கொடுக்க சொன்ன அவகாச காலங்கள் முடிவதற்குள் கொட்டியளத்தான் இறந்து போனார்.

கொட்டியளத்தான் இறக்கும்போது ராமசாமிக்கு 3 வயது. கொட்டியளத்தான் வைத்திருந்த படகுகளில் ஒன்று சேதாரமாக இருந்ததால் அதை ஊர் மக்கள் யாரும் எடுக்கவில்லை. அந்தப் படகே தற்போது ராமசாமி வைத்திருக்கும் படகு. கொட்டியளத்தானின் நிலைமை எல்லாம் ராமசாமிக்கு அவரது அம்மாவின் மூலம் தெரியவந்தது. அதைக்கேட்ட அவருக்கு தந்தையை மதிக்காத ஊருக்கு தக்க பாடம் புகட்ட நினைத்தார். அதே சமயத்தில் ஊர்காரர்களின் பணத்தை திருப்பிக் கொடுத்து நம் பரம்பரை படகுகளை எல்லாம் மீட்க விரும்பினார். ராமசாமியும் பெரிதாக படிக்கவில்லை. சிறுவயதிலேயே மீன்பிடிக்கும் தொழிலில் இறங்கிவிட்டார். அதேசமயம் தன் தந்தை

வாழ்ந்த ஊரிலிருந்து மற்ற ஊர்களுக்கு அனைவரும் குடியேறுவதையும் ராமசாமி விரும்பவில்லை. அப்போது தான் நெத்திலிக் குப்பத்தில் மீன் பதப்படுத்தும் தொழிற்சாலை வர இருப்பதாக ஒரு செய்தி. ராமசாமியின் தூரத்து உறவினர் ஒருவர் ஆட்சியர் அலுவலகத்தில் பணிபுரிகின்றார். அவரிடம் ராமசாமி கேட்ட போது அவர் நெத்திலிக் குப்பத்தில் தொழிற்சாலை வர இருப்பது உண்மைதான். அதற்கு அரசாங்கத்தில் இருந்து போதிய தொகை ஒதுக்காததால் அந்த தொழிற்சாலை வருவது தாமதமாகிக் கொண்டே வருகிறது என்றார். ராமசாமியும் மேல் அதிகாரிகளிடம் சென்று கொடுக்க வேண்டியதைக் கொடுத்து தொழிற்சாலை கட்டுவதற்கு வழி செய்தார். ராமசாமியின் இடைவிடாத முயற்சியால் தொழிற்சாலை கட்டுவதற்கு அரசாங்கம் முன்வந்தது. ஆரம்பமாக சிறு தொகையை மட்டுமே ஒதுக்கியது. பணம் பற்றாக்குறையாக இருந்தது. அது ராமசாமிக்கு ஒரு சந்தர்ப்பமாகத் தெரிந்தது. உடனே ராமசாமியிடம் இருந்த சொத்துக்களை எல்லாம் விற்று, ராமசாமிக்கு அவரது தாய் வழியில் சில சொத்துக்கள் இருந்தன. அதையும் அவர் தாயின் சம்மதத்தோடு விற்று அரசாங்கம் ஒதுக்கிய பணத்தோடு இவரும் 2,00,000ரூபாய் பணத்தை தொழிற்சாலை கட்டுவதற்கு கொடுத்தார்.

நெத்திலிக் குப்பத்தில் தொழிற்சாலை கட்டுவதை அறிந்த வெளியூருக்கு குடிபோன நெத்திலி குப்பத்துக்கு மக்கள் தாங்களாகவே முன்வந்து தாங்களே இலவசமாக கட்டிட வேலை பார்த்தனர். மக்களே தானாகவே வந்து வேலை பார்க்க தொடங்கியதும், நாளடையில் மீதித்தொகையும் அரசாங்கம் கொடுத்தது. மீன் பதப்படுத்தும் தொழிற்சாலையும் முழுமையாகக் கட்டப்பட்டது. மக்கள் அனைவரும் மீண்டும் இதே ஊரில் தஞ்சம் புகுந்தனர். தொழிற்சாலையிலும் உள்ளூர், வெளியூர் என ஏராளமானோர் வேலைக்கு வந்து சென்றனர். ராமசாமியின் உதவியை அறிந்த ஊரார் கொட்டியளத்தானின் மகன் என்றைக்கும் சொன்னதைச் செய்யும் குமாரன் தான் என்று கூறி வாழ்த்தினர். கொட்டியளத்தானிடம் இருந்து பறிக்கப்பட்ட அனைத்து படகுகளும் 38 வருடங்களுக்கு முன் எப்படி இருந்ததோ அதேபோல் திரும்ப ராமசாமியிடம் வந்து சேர்ந்தது. மீண்டும் கொட்டியளத்தானின் படகுகள் கடலை நோக்கி எதிர்நீச்சல் போடத் தொடங்கிவிட்டன.



P.Divya III BCA

## நல்லதே நடக்கும்

நல்லதே நினை
நல்லதே சொல்
நல்லதே செய்
நல்லதே நடக்கும்
நல்லதே உணர்வாயிருக்கும் வரை....

## எதிர்காலம் உங்கள் கையில்

உரமாக்கிய இறந்தகாலமதை
நிகழ்கால பயிரில் தூவிட
கனிந்த எதிர்காலக்கனி
உங்கள் கைகளில்
இது உறுதி!

## துயர்? உயர்?

தூரத்தை எண்ணி பாரப்படும்
ஒவ்வொரு கணமும் துயரம்தான்!
பொறுமையுடன் பயணித்தால் - நீ
வளர்வது உயரம்தான்

## ஏற்றுக்கொள்

எது எப்படியோ அதை
ஏற்றுக்கொள்! - நீ
மாறும்போது நிச்சயம் அதுமாறும்
காத்திரு.. விடாமுயற்சியுடன்

## திருப்தியும்! அதிருப்தியும்!!

உறுதியுடன் போராடும் போது
தோல்வியும் திருப்தி தான்
உறுதியின்றி போராடும் போது
வெற்றியும் அதிருப்தி தான்...

வல்லவர்களுக்கு வெகுமதியும்
நல்லவர்களுக்கு நிம்மதியும்
எப்பொழுதும் கிடைத்துக்
கொண்டே தான் இருக்கின்றன.

## பொறுமை

நினைத்தது கிடைக்கும் - ஆனால்
நினைத்ததுமே கிடைக்காது...
உங்களின் வெற்றிக்கு
உழைப்புடன் காத்திருங்கள்...
பொறுமையாக!

## வெற்றி

உயர்வை விரும்பும் - மனமும்
உழைப்பை விரும்பும் - அறிவும்
நம்மிடம் நிலைத்து விட்டால்
வெற்றி தேசத்தில் சுற்றலாம்...

## உங்களுக்கு பிடி

நல்ல உணர்வுடன் வாழுங்கள்
பின் நாளில் நீங்கள் நிச்சயம்
தடுமாறும் சூழலில் உங்களுக்கு
பிடியாய் உதவும்...

## அழகிய சிற்பம்

எதிலும் சிறப்பினை வெளிப்படுத்துமாறு
உங்களின் மனம் அடம் பிடித்தால்...
உங்களைச் சார்ந்த ஒவ்வொரு
விசயமும் இவ்வுலகிற்கு சிற்பமே!

## உண்மை புலப்படும்

மனம் ஓர்மை நிலையினை நோக்கி
பயணித்துக் கொண்டிருக்கையில் - நம்
யூகங்களிலுள்ள பொய்கள் அகன்று
உண்மை புலப்பட ஆரம்பிக்கும்...

உங்களின் நல்ல விசயங்கள்
ஓர் அடர்ந்த காடு என்றால்...!
உங்களின் தீய விசயங்கள்
ஒரு தீப்பொறியாகும்!

நல்லனவற்றையும், தீயனவற்றையும்
பிறர் வருந்த பயன்படுத்தாமல்...
பிறர் திருந்த பயன்படுத்துவோம்...

முழு மனதுடன் கட்டுப்பாடுகளை
ஏற்பவர்கள் தான் சுதந்திரத்தை
அனுபவிக்க முடியும்...
சுதந்திரமானவர்கள் எல்லோரும்
நியாயமானவற்றிற்கு
கட்டுப்பட்டவர்களாகவே இருக்கிறார்கள்...

குறைகள் இல்லாத வாழக்கை - ஒரு
தற்காலிக இன்பம்!
நிறைகளே இல்லாத வாழ்க்கை - ஒரு
தற்காலிக துன்பம்!

உங்களின் குறிக்கோளினை அடைவதானால்
நீங்கள் மகிழ்ச்சியடையவில்லை!
நீங்கள் மகிழ்ச்சியாய் இருப்பதனால்
உங்கள் குறிக்கோளினை அடைகிறீர்கள்!

## ஒளி தரும் நிலவாய் மாறும்

திருத்தவே முடியாத தன்மகனை
இருள் நிறைந்த உலகத்தில் தன் மகன்
வாழட்டும் என கடவுளிடம்
வேண்டுகிறாள் அன்னை...
கடவுளும் அவளின் வேண்டுதலை
நிறைவேற்றினாலும்...
தன் மகன் இருளில் துன்பப்படுவானோ
என்று ஒளிதரும் நிலவாய் மாறும்
அவளின் உள்ளம்!

## மூன்றும் ஒன்றே

அம்மா என்ற மூன்றெழுத்தில் - அந்த
ஜீவன் வைக்கும் அன்பு என்ற
மூன்றெழுத்தில் - உறவு என்ற
மூன்றெழுத்தாய்க் கலந்து நின்றாலும்
மூன்றும் ஒன்றே...

## பாடம் நடத்துகிறார்கள்

கடவுள்
அனுபவத்தைக் கொடுத்து பாடம்
நடத்துவார்

ஆசிரியர்
நல்லது கெட்டதைக் காட்டி
பாடம் நடத்துவார்

தந்தை
அறிவுடன் இருக்க
பாடம் நடத்துவார்...

அம்மா
மனதினை புரிந்து
பாடம் நடத்துவார்

## தாய்மடி உறக்கம்

அம்மாவைப் பற்றிய ஆயிரம் சொற்பொழிவுகள்
புரிய வைப்பதை விட
சில நிமிட தாய்மடி உறக்கம்
அம்மாவின் அற்புதத்தை உணர்த்தும்.

## தாயின்மடி கோவிலடி

தாயின்மடி கோவிலடி
படுத்து கண்ணுறங்கி பாரம்மா...
சொர்க்கம் உன்தலை அருகில்
வீணாக அதை தேடி அலைந்தாயம்மா?
போகட்டும்...
படுத்துறங்கு கலைமகளே
என் கண்ணம்மா!

**A.M.தினேஷ்**
M.Sc., Chemistry - II

# Dr. APJ Abdul Kalam

**Introduction :**

Avul Paki Jainualbdeen Abdul Kalam 15 October 1931 - 27 July 2015 Usually refered to as APJ Abdul Kalam.

He was the 11th president of India from 2002 to 2007.

usually referred to as APJ Abdul Kalam was a famous Indian Aerospace Engineer.

A carrier Scientist turned reluctant politician when he was president he was popularly known as the people's president, he was popularly known as the people's president.

**Kalam born :**

Kalam was born and raised in Rameshwaram, Tamil Nadu, and studied physics and aerospace engineering.

He Spent the next four decades as a scientist and science administrator, Mainly at the defence research and Development Organization (DRDO) and Indian space research organization (ISRO) and was Intimately involved in India civilian space program and military missito development efforts.

**Kalam Awarded :**

He was awarded the "Bharat Ratna" India's highest civilian honour in 1997. He has also been a professor (of aerospace engineering). Kalam is the first chancellor of the Indian Institute of space science and Technology Thiruvananthapuram (IIST). He is known as the missile man of India.

He also played a pivotal organizational, technical and political role in india's pokhran-II nuclear in 1998. the first since the original nuclear test by india in 1974.

Kalam was elected president of India in 2002 with the support of both the rulling Bharatiya Janata Party and the opposition Indian National Congress. After serving a term of five years. he returned to his civilian life of education, writing and public service.

He was a recipient of several prestigious award Including highest civil an honor.



**You cannot change**
**Your future. But you**
**Can change your habit's**
**and surely your habits**
**will change your future**
**- Dr. APJ Abdul Kalam**

**A.Saranya**
II B.Sc Computer Science

## நட்பு

தடுமாறும் போது தாங்கிப் பிடிப்பவனும்
தடம்மாறும் போது தட்டிக் கேட்பவனும்
உண்மையான நண்பன்

## FRIENDS

F - Feigned for you
R - Respect you
I - Include you
E - Encourage you
N - Need you
D - Deserve you
S - Stand by you

## நல்ல நண்பன்

நல்ல நண்பனே!
நான் வாழ! நித்தம் வேண்டும்
இதயம் படைத்தவன் என் நண்பன்
என் துயர் துடைக்க அனுதினமும்
பாடுபடுபவன் என் நண்பன்
காலிழந்த நான் செயல்பட
காலாய் இருப்பவன் என் நண்பன்
முயற்சியால் அவன் பெற்ற வெற்றியை
எனக்காய் விட்டுக் கொடுப்பவன்
என் நண்பன்
அறியாமையால் நான் செய்யும் தவறை
அன்பாய்த் திருத்துபவன் என் நண்பன்
ஆண்டவன், அருளுடன் நான் வாழ
எனக்குக் கிடைத்த பொக்கிஷம்
என் நண்பன்!

நட்பு என்பது மலரைப் போல் அல்ல
நாளில் பூத்து உதிர்ந்து விடுவதற்கு
அது வானில் உள்ள நட்சத்திரத்தைப்
போல் வானம் இருக்கும் வரை இருக்கும்.

நிலவுக்கு வெளிச்சமாக...
நெருப்புக்கு வெப்பமாக...
கவிதைக்கு வார்த்தையாக...
எனக்கு நீ...
உனக்கு நான்...
நமக்கு நம் அன்பான நட்பு

ஆயிரம் பேரை நண்பராக வைத்திருப்பது
உனக்குப் பெருமையல்ல...
ஆயிரம் பேர் எதிர்க்கும் போதும் உனக்காக
அவர்களை எதிர்க்கக் கூடிய நண்பன்
ஒருவனை வைத்திருப்பதே
உனக்குப் பெருமையாகும்...

நூறு நண்பர்களைத் தேடுவதை விட நூறு ஆண்டு
நிலைத்து நிற்கும் ஒரு நண்பனைத் தேடு...
உன்னை உச்சத்தில் வைக்கும் இந்த நட்பு...

எதிர் பார்க்கும் போது நல்ல நண்பர்கள்
கிடைப்பதில்லை
நல்ல நண்பர்கள் எதையும் எதிர்பார்ப்பதில்லை
அன்பான நட்பினைத் தவிர... ஆதலால்
நட்பையே நேசிக்கிறேன்...
நட்பையே சுவாசிக்கிறேன்...

## நட்பு

என் நட்பு
விரல் விட்டு எண்ணுவதற்கு
பல நண்பர்கள் இருந்தாலும்
விரல் கோர்த்து நடக்க உண்மையான
ஒரு நண்பன் போதும்..

அறிமுகம் இல்லாமல் வந்தோம்
அடிக்கடி பேசிக் கொண்டோம்
உறவிற்கு மேலே உயிர் ஆனோம்
காலங்கள் கடந்து சென்றாலும்
கடைசி வரை தொடர வேண்டும்
நம் நட்பு...!

## வாழ்க்கை

நேரத்தை வீணாக்கும் போது கடிகாரத்தை பார்!
ஓடுவது முள் அல்ல உன் வாழ்க்கை
உனக்கான பாதையை நீயே
தேர்ந்தெடுப்பதுதான் சிறந்தது...
ஏனெனில் யாராலும் உன் கால்களைக்
கொண்டு நடக்க முடியாது...
உன் கைரேகையைப் பார்த்து
உன் எதிர்காலத்தை நம்பிவிடாதே!
ஏனென்றால் கை இல்லாதவனுக்கும்
எதிர்காலம் உண்டு
ஒருவனின் காலடியில் வாழ்வதை விட
எழுந்து நின்று உயிரை விடுவது
எவ்வளவோ மேல்

## முயற்சி, வெற்றி, நம்பிக்கை

வியர்வைத் துளிகளும், கண்ணீர்த் துளிகளும்
உப்பாக இருக்கலாம் ஆனால்
அவைதான் வாழ்வை இனிமையாக மாற்றும்
முயலும் வெல்லும், ஆமையும் வெல்லும்
ஆனால் முயலாமை என்றும் வெல்லாது...
நம்பிக்கையுடன் நகர்ந்து கொண்டே இரு
நதி போல
ஒரு கடத்தல் வெற்றி
காத்திருக்கும் கடலாக..
கனவுகள் பிறப்பதற்கு
ஒரு நிமிடம் போதும். ஆனால்
நினைவுகள் மறப்பதற்கு
ஒரு ஜென்மம் வேண்டும்.

## அம்மா

என்னை நடக்க வைத்துப்
பார்க்க வேண்டும் என்ற
ஆசையை விட
நான் விழுந்து விடக்கூடாது என்ற
கவனத்தில் தான் இருந்தது
உன் தாய்ப்பாசம்.
உலகின் ஏழு அற்புதங்கள்
இருப்பதாகச் சொல்வார்கள்
எனது முதல் அற்புதம்
என் அன்புத்தாய் தான்...!

இந்த உலகின் நீ
நன்மை செய்யும் போது
பாராட்டி, தீமை செய்யும் போது உன்னை
விமர்சித்து அறிவுரை கூறுவது அன்பான
தாய் மட்டுமே ஆகும்.
உன் நினைவுகளினால் நான்
அழிந்து போனாலும்
உன் நினைவுகள் என்றும்
விட்டு அழிவதில்லை
அம்மா...!

## அம்மா

மறு பிறவி இருந்தால்
செருப்பாக பிறக்க வேண்டும்
என் அம்மா காலில் மிதிபட அல்ல
என்னை சுமந்த அவளை
ஒருமுறை நான் சுமப்பதற்காக...!!

## நட்பு

என் ஆயுள் முழுவதும்
உன் நட்பு நீடிக்க வேண்டும்
இல்லையெனில்
உன் நட்பு உள்ளவரை
என் ஆயுள் இருக்க வேண்டும்..!
முகத்தை காணும் முன்பே
நேசிக்கத் தெரிந்தவள்
தாய் மட்டுமே...!!
மூச்சு நின்றால் மட்டும்
மரணமல்ல நம் அன்பான
தாயின் பேச்சு நின்றால் கூட
அது நமக்கு மரணம் தான்...!
எனக்குத் தெரிந்த மூன்று எழுத்துக்
கவிதை அம்மா, நட்பு
இவை இரண்டும் ஆகும்.
உறவு - கடவுள் தந்த வரம்
தாய் - கடவுளுக்கு நிகரான வரம்
நண்பன் - கடவுளுக்குக் கூட
கிடைக்காத வரம்

**A.Saranya**
II B.Sc Computer Science



# நட்பு

ந.சதிஷ்குமார்
இளநிலை முதலாமாண்டு வேதியியல்

அன்று சந்துரு ஏனோ கல்லூரிக்கு பதற்றத்துடனே வந்து கொண்டிருந்தான். கல்லூரிக்கு வரும் வழியில் எதனையும் கவனிக்காமல் ஒருவித சிந்தனையுடன் வந்தான். அவனது நடவடிக்கைகள் யாவும் சற்று வித்தியாசமாகவே இருந்தன. அவன் வகுப்பறையினுள் நுழையும்போது அவனது நண்பர்கள் அழைத்தும் பேசாமல் அவனது இடத்தில் போய் அமர்ந்தான். ஆனால் சந்துரு அனைவரிடமும் சகஜமாகப் பழகக் கூடியவன். எல்லோரிடத்தும் அன்பு கொண்டவன். மிகவும் நல்லவன். ஆனால் அவனது நடவடிக்கைகள் இன்று வித்தியாசமாகவே இருந்தன. இதனை அறிந்த அவனது நண்பன் சதிஷ் என்னவென்று அவனிடம் கேட்டான்?

அதற்கு அவன் தன் அம்மா சிறிது சிறிதாக மிகவும் கஷ்டப்பட்டு சேர்த்து வைத்த ரூபாய் 25 ஆயிரத்தை வங்கியில் செலுத்துவதற்கு எடுத்து வந்துள்ளான். எங்கும் வரும் வழியிலோ அல்லது கல்லூரியிலோ, யாவரெனும் எடுத்து (திருடி) விடுவார்களோ! அல்லது இவன் எங்காவது தொலைத்து விடுவானோ என்று எண்ணி பயந்து கொண்டிருந்தான். இதனை அறிந்த அவனது நண்பன் அவனுக்கு ஆறுதல் கூறி அவளை இயல்பு நிலைக்கு மாற்றினான்.

ஆனால் சதிஷ் ஒரு கொடியவன், அடுத்தவர் பொருளுக்கு ஆசைப் படுபவன், தீய குணங்களைக் கொண்டவன். ஆனால் அவனைப் பார்த்தால் அப்படித் தெரியாது. மிகவும் நல்லவன் போல் இருப்பான். இதனைப் பார்த்துத் தான் சந்துரு அவனை நல்லவன் என்று நம்பி இந்த விஷயத்தைக் கூறியுள்ளான்.


பழம் நழுவி பாலில் விழுவது போல் தனக்கு கிடைத்த இந்த வாய்ப்பினை பயன்படுத்தி கொண்டான். எப்படியேனும் அந்தப் பணத்தை எடுக்க வேண்டும் என்று திட்டமிட்டான். தனது திட்டத்திற்கு அவனது நண்பர்களான ரஞ்சித்தையும், அரசையும் அழைத்துக் கொண்டான். அவனது இந்தத் திட்டத்திற்கு அவனது நண்பர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. பின் அவர்களை வற்புறுத்தி, மிரட்டி, ஒத்துக் கொள்ள வைத்தான். அவனது திட்டப்படியே பணத்தை அவனது நண்பர்களின் உதவியோடு எடுத்து தனது பையினுள் வைத்தான்.

கல்லூரி முடிந்த பின்பு அனைவரும் சென்றவுடன், பணத்தை எடுத்து விட்டோம் என்ற ஆர்வத்தோடும், மிகுந்த மகிழ்ச்சியோடும் தனது பையைத் திறந்தான். ஆனால் சந்துரு தான் கொண்டு வந்த பணத்தைத் தொலைத்துவிட்டு தேடிக்கொண்டிருக்கிறான்.

பையினைத் திறந்து பார்த்தபோது பணம் அந்தப் பையில் இல்லை. உடனே என்ன செய்வது என்று தெரியாமல் அவனது நண்பர்களிடம் சென்று நடந்ததைக் கூறுகிறான். ஆனால் சதிஷ்க்கு அவனது நண்பர்கள் மீது சந்தேகம் ஏற்பட்டது. பின் நண்பர்களிடம் பணத்தைக் கேட்டான். உடனே அவனது நண்பர்கள் நாங்கள் எடுக்கவில்லை என்று மறுத்தனர். பின்பு சதிஷ் தனது கைபேசியை எடுத்து ஒரு வீடியோவை தனது நண்பர்களிடம் காட்டினான். அதனைப்பார்த்த அவனது நண்பர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

என்ன வீடியோ என்றால், பல நாட்களுக்கு முன்பு தனது தந்தையின் மருத்துவ செலவுக்காக சதிஷ் உடன் அரசு செய்த திருட்டை வீடியோவாக எடுத்துக் கொண்டு அவர்களிடம் காட்டினான். ஆனால் அரசோ தனது தந்தையின் மருத்துவ செலவுக்காக மட்டுமே பணத்தை திருடியுள்ளான். அந்தச் செயலுக்கு அவன் மிகவும் வேதனைப்பட்டான். திருடுவது தப்பு என்று அவனுக்கு நன்கு தெரியும்.

பின்பு அவனது நண்பர்கள் பணத்தை எடுத்ததை ஒப்புக்கொண்டனர். ஆனால் அவனது நண்பர்கள் பணத்தை சந்துருவிடம் கொடுக்கவே பணத்தை எடுத்துள்ளனர். இதனை அறிந்த சதிஷ் அவர்களைத் தாக்கிவிட்டு, அந்த பணத்தை எடுத்துக் கொண்டு ஓட்டம் பிடித்தான். ஓடிக்கொண்டிருக்கும்போது ஓர் இடத்தில் கால்தடுக்கி விழுகிறான். அவ்வாறு விழும்போது பணம் ஒருவருடைய காலடியில் விழுகிறது. யார் என்று பார்த்தால் அவனது நண்பன் சந்துரு. இவனுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. திகைத்து நிற்கிறான். கண்களில் நீர் வழிகிறது. உடனே சந்துரு என் பணம் எப்படி உன் கையில் வந்தது என்று கேட்கிறான். பதில் சொல்ல வார்த்தை இல்லாமல் நிற்கிறான் சதிஷ். உடனே சந்துரு சற்றும் யோசிக்காமல் ஒ யாரும் என்னிடத்தில் இருந்து பணத்தை எடுக்காமல் நீ பார்த்துக்கொண்டாய் உன்னைப்போல் ஒரு நண்பன் இருக்க நான் தவம் செய்திருக்க வேண்டும் என்று கூறி அவனைக் கட்டியணைத்தான். உடனே சதிஷ் தன் நண்பனுக்கு இப்படியொரு துரோகத்தைச் செய்து விட்டோமோ என்று வருந்தி, அன்றிலிருந்து அவனது அனைத்து தீய பழக்கத்தையும் விட்டுவிட்டு ஒரு நல்ல மனிதனாக மாறினான். இருவரும் நண்பர்களாக மகிழ்ச்சியோடு வாழ்ந்தனர்.




**S.Suruthi** III BCA




**A.S.Krishnaveni**
III B.Sc., Maths



# ஏழை போட்ட சோறு

**நா.ரஞ்சித்குமார்**
இளநிலை முதலாமாண்டு வேதியியல்

பொன்னன் என்பவன் சாதரண விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவன். அவனுக்கு விவசாயத்தில் ஆர்வம் கிடையாது. அவன் ஒரு சோம்பேறி. அவன் எந்த செயலையுமே குறுக்கு வழியில் அடைய வேண்டும் என்ற எண்ணம் கொண்டவன். அவனுக்கு கயல்விழி என்ற ஒரு தங்கை. பொன்னனுக்கு தங்யின் மீது மிகுந்த பாசம். தங்கையை பெரிய படிப்பு படிக்க வைக்க ஆசை பொன்னனுக்கு உண்டு. பொன்னனின் ஆசைக்கு ஏற்ப தங்கை நன்றாக படிக்க 10ஆம் வகுப்பிலும், 12ஆம் வகுப்பிலும் மாவட்டத்திலேயே முதல் மதிப்பெண் பெற்றாள்.

பொன்னனுக்கு தாய், தந்தை கிடையாது. அவனது வயதான தாத்தா பொன்னனையும், கயல்விழியையும் வளர்த்து வந்தார். பொன்னனுக்கு ஒரு ஏக்கர் நிலம் உண்டு. அதில் அவனது தாத்தா விவசாயம் செய்து அவர்களை காப்பாற்றினார். பொன்னன் விவசாயத்தில் விவசாயிகள் படும் பல கஷ்டங்களை உணர்ந்து அவனுக்கு விவசாயம் பிடிக்காமல் போய்விட்டது. இருப்பினும் அவனுக்கு படிப்பு ஏறாத காரணத்தால் அவன் அவனுடைய நண்பனோடு சேர்ந்து கொண்டு காலத்தைக் கழித்தான். பொன்னன் தவறான நண்பர்களோடு பழகிக் கொண்டு இருந்தது அவனுக்குத் தெரியவில்லை. அவன் அவர்களோடு சேர்ந்து குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்க ஆசைப்பட்டான். அதற்காக லாட்டரி சீட்டு வாங்கி பெரிய பணக்காரன் ஆக வேண்டும் என்று பேராசை கொண்டான்.

அவனது தங்கை கயல்விழி பெரிய படிப்பு படிக்க வைக்க விரும்பி அவன் நண்பனிடம் உதவி கேட்டான். அவன் நண்பனுக்கு கயல்விழி மீது ஆசை அதனால் உதவினான். அவனது நண்பன் கண்ணன். பொன்னன் தங்கை கயல்விழி காதல் வலையில் விழுந்தாள். மேலும் பொன்னனின் தவறான வழியில் சென்று லாட்டரி சீட்டு, குடிப்பழக்கம் என பலவிதமான தீயவழிகளில் சென்று காடு விற்றான். அவனது தாத்தா வயதான காலத்தில் நோய் ஏற்பட்டு இறந்தார்.

பொன்னன் தன் தங்கையோடு நடுத்தெருவிற்கு வந்தான். அவன் கையில் இருந்தது ஒரு லாட்டரி சீட்டு பொன்னனின் நண்பன் கண்ணன் கயல்விழி மீது கொண்ட காதலால் அவர்களுக்கு உதவினான். அவர்கள் இருவருக்கும் தெரியவில்லை அவன் கெட்டவன் என்று. பொன்னன் கையில் வைத்திருந்த லாட்டரி சீட்டு பரிசு பெற்றது என்ற தவறான கூற்றை நம்பி அவன் வெளியே சென்று விட்டான். அப்பொழுது அவன் நண்பன் அவனுடைய தங்கையை ஏமாற்றி விட்டான். பொன்னன் திரும்பி வந்தான் அவனது தங்கை இறந்து கிடந்தாள்.

பொன்னனுக்கு ஒரே சமயத்தில் இரண்டு அதிர்ச்சி ஒன்று லாட்டரி சீட்டு ஏமாற்றத்தால் சொத்தை இழந்தான். தவறான நண்பர்களால் அவனுக்கு சொந்தமாக இருந்த தாத்தாவும், அவனது தங்கையும் இறந்துபோனார்கள். அனைத்தும் இழந்து சோற்றுக்குக் கூட வழியில்லாமல் பிச்சைக்காரன் போல் அலைந்து திரிந்தான். அவனை ஆதரிக்கவும் அரவணைக்கவும் யாரும் இல்லை. சோறு போடும் நிலத்தை விற்று ஒரு

வேளை சோற்றுக்காக நாய் போல் அலைந்து திரிந்தான். பணக்காரன் ஆக வேண்டும் என்ற ஆசை வெறும் கனவாக போய் அவனது சொத்தும், சொந்தமும் அழிந்து, தீய வழியிலும், தவறான பழக்கங்களிலும் போய் அப்பொழுது ஆதரிக்க ஆள் இல்லாமல், சோறு போட உறவில்லாமல் பிச்சைக்காரன் போல் நடுரோட்டில் நின்றான். அப்பொழுது காரில் வந்த பணக்காரன் ஒருவன் வழியில் ஒரு குழந்தையோடு நின்ற ஒரு பெண் உணவுக்காக பிச்சை கேட்ட பொழுது செல்வந்தன் கண்டுகொள்ளவில்லை. அதைப் பொன்னன் பார்த்தான். பசியின் கொடுமையால் பொன்னன் மயங்கினான். அந்தக் குழந்தையை வைத்திருந்த ஏழைப் பெண், பொன்னனுக்கு சோறு கொடுத்தாள். அதை வாங்கி பொன்னன் உண்டான். அப்பொழுது பொன்னன் உணர்ந்து கொண்டான். எதையும் நேர்மையான வழியில் உழைத்து பெறவேண்டும். மேலும் பணக்காரன் ஆன பிறகு பிறர்க்கு உதவும் குணம் வேண்டும். மேலும் தீய வழியில் செல்லக்கூடாது என்றும் மேலும் ஏழைப் பெண் போட்ட சோறு கூட பணக்காரர்கள் செய்யவில்லையே என்றும் உலகம் கிடக்கும் நிலையைக் கண்டும் சிந்தித்தான். மேலும் உண்ட உணவு "ஏழை போட்ட சோறு" என்று உணர்ந்தான்.

## வேடிக்கையான மனிதர்கள்

வானில் வண்ணமாய் ஒளிரும் சூரியனின்
செங்கதிர்கள் உன்னை சுட்டெரித்தாலும்
காத்திரு அந்திமாலைவரை
பின்பு அதுவும் இறக்க நேரிடும்
தன் கதிர்களை மறைத்துக்கொண்டு

வஞ்சகங்களைத் தீர்க்க எண்ணி தன்
காலத்தைக் கடக்கும் வஞ்சகர்கள்
தீர்க்க நினைப்பது வஞ்சகத்தை அல்ல
கடந்து செல்லும் காலத்தைத்தான்

விமர்சனங்களைப் பார்த்து
நகைபேசும் உலகில்
வேடிக்கையானது இயந்திரங்களால் அல்ல
இயந்திரங்களை இயக்கும் மனிதர்களால்

அழிந்து கொண்டு வருவது
சிட்டுக்குருவிகளும்
வினோதமான மனிதர்களும் தான்
அவைகள் எண்ணிக்கையில்
இவர்கள் எண்ணங்களில்

கடவுளை நம்பு
கல்லை நம்பாதே
உன்னை நம்பு
உன் நிழலை நம்பாதே

பச்சிளம் குழந்தை பசிக்காக அழுகிறது
தாய் உள்ளம் அதையெண்ணி
நெருப்பாய்த் துடிக்கிறது
நெஞ்சம் நெடி ஏறி
பஞ்சம் குடி ஏற
சாவே ஒரே வழி
என வயிறு வசைபாடுகிறது.

பசி, பட்டினி, பஞ்சம்
ஒருவனைத் தாக்கிக் கொண்டிருந்தால்
அவன் மரணத்தை நோக்கி
நொடி நேரம் காத்துக் கொண்டு இருக்கிறான்
கோபம், பொறாமை, ஆசை
ஒருவனை ஆண்டு கொண்டிருந்தால்
அவன் மரணப் படுக்கையில்
நொடி பொழுதில் தூங்கிக்
கொண்டு இருக்கிறான்.

**நா.ரஞ்சித்குமார்**
இளநிலை முதலாமாண்டு வேதியியல்

# கண்ணீர் உறவுகள்

ப.விஜயராஜ்
இளநிலை
முதலாமாண்டு வேதியியல்



உண்மையான உறவுகள்
உருப்படியாக இருப்பதில்லை
குருதி இன்றி வீழ்ந்தாலும்
தூக்க ஒரு நாதி இல்லை!

செய்யும் போது
தெய்வம் என்பார்கள்!
செய்யாவிட்டால்
வேசி என்று
ஏசிப்பார்கள்!

கொடுப்பதையும் வாங்கிக்கொண்டு
பெற்றதையும் மறந்து விட்டு
பெற்றோர்களும் அவமதிப்பார்கள்!..

இருப்பவர்களே
இல்லாதவர்களை
புத்தி மாறி
குத்திக் காட்டுவர்!

இல்லாதவர்களோ
இருப்பவர்களை
வேண்டுமென்றே
வழி மாற்றுவர்!..

வசந்தங்கள் உண்டு
வாழ்க்கையில் - ஆனால்
வசதிகள் இல்லை
வாய்ப்புகள் உண்டு
வாழ்க்கையில் - ஆனால்
வழிகாட்டுதலுக்கோ ஆள் இல்லை
என்னை வாழ்த்தியும் பேசவில்லை!...

துன்பம் வரும்போது கூட
துடித்துக் கொண்டு இருந்தால் கூட
ஆறுதலுக்கு ஆள் இல்லை - இன்றோ
அனாதையோ! நிறைய பிள்ளை?...

எழும் போதே பலரும் வருவர் - ஆனால்
விழும் போது வரமாட்டார்
அழும்போது அனைவரும் வருவர் - ஆனால்
ஆறுதல் சொல்லைத் தரமாட்டார்

பட்டென்று பேசும் உறவுகளையும்
பார்த்து விட்டேன் - என்
பாசங்களை எல்லாம்
பராமரிக்க ஆள் இல்லாமல்

பாசச் சிறைக்குள் கைதியாக
ஆசைப்படுகிறேன் - என்னை
கைது செய்ய ஆள் இல்லாமல் அலைகிறேன்.

பண்டமாற்று முறையாகவே
பாசங்களும் மாறியது - பொருளை
பரிமாறிக் கொள்வதிலேயே
உறவுகளும் ஏங்குது!..

பிஞ்சு வயதிலிருந்தே அவமானங்களைப்
பார்த்து விட்டு போகும் நான் - நாளை
பென்சு காரில் போனாலும் - இந்த
ஆதங்கமெல்லாம் என்னை விட்டு போகாது!

பாசத்தைக் காட்ட
பல நாளாக ஏங்குகிறேன்.
உறவென்று யாருமில்லை - எனக்கு
உரிமையும் கிடைக்கவில்லை
வருத்தத்தில் இருக்கிறேன்
அணைத்துக் கொள்ள வாருங்களே
என் உறவுகளே!




# நீ உன்னை அறிந்தால்?!

ரா.சண்முகம்
III B.Sc Physics

இந்தியாவின் மக்கள் தொகை 130 கோடி. அதில் 35 வயதிற்குட்பட்ட இளைஞர்கள் மட்டும் 65 கோடிக்கும் மேல். கிரேக்கர்கள் இந்தியாவை பாலும் தேனும் ஓடுகிற தேசம் என்றனர். மனித வளமும் இயற்கை வளமும் நிறைந்த நம் நாட்டில் இன்னும் ஏழ்மை, தொழில்நுட்பத்திற்காக மற்ற நாட்டிடம் கையேந்துதல் போன்றவை தலை விரித்து ஆடுகிறது.

காரணம் பல இருக்கலாம். அதில் மிக மிக முக்கிய காரணம் இளைஞர்கள் மிகவும் "ஹாயாக" சுற்றுவதால் தான்.

USA, Europe - ஐ எடுத்தக் கொள்ளுங்கள். இதன் மொத்த மக்கள் தொகையே 100 கோடியைத் தாண்டாது. அப்படி இருக்கும் போது 90% கண்டுபிடிப்புகள் கடந்த 200 ஆண்டுகளாக அங்குதான் நிகழ்த்தப்படுகின்றன. Cycle, Train, Aeroplane, Steam Engine, Computer, Mobile, Facebook, WWW, DNA, Genetics இன்னும் நிறைய. ஏன் புதுமையான சிந்தனைகள் கூட மேலை நாட்டிலிருந்து தோன்றியது தான்.

ஆனால் இந்தியாவில் வெளியில் தெரியும்படியான எந்த சாதனையும் நிகழ்த்தப்படவில்லை. அவை மிகமிகக் குறைவு. 1969ஆம் ஆண்டிலேயே அமெரிக்கா நிலவுக்கு மனிதர்களை அனுப்பி சாதனை புரிந்தது. ஆனால் நாம் 2008-ல் தான் விண்கலனை நிலவுக்கு அனுப்பி இருக்கிறோம். USA, Europe விட இந்தியா தொழில் நுட்பத்தில் 60 ஆண்டுகள் பின்தங்கியுள்ளது.

என்ன வளம் இல்லை நம் திருநாட்டில்? வளங்களைச் சுரண்டும் அரசியல்வாதிகளும், அரசு அதிகாரிகளும் பொறுப்பற்ற இளைஞர்களும் தான் காரணம் நம்நாடு இன்னும் முன்னேற்றம் அடையாததற்கு.

வெளிநாட்டினர் கண்டுபிடித்ததால், இந்தியர் அதை திறமையாக தங்கள் சுயநலத்திற்கு பயன்படுத்திக் கொள்கிறார்கள். (Internet, Android, Facebook...) ஆனால் இந்தியர்கள் யாரும் குறிப்பிடும் வண்ணம் ஒன்றையும் கண்டுபிடித்தது இல்லை.

இரண்டு பட்டப்படிப்பு படித்த பெண் ஒருத்தியை நான் கேட்டேன், இந்தியாவின் ஜனாதிபதி யார் என்று? அவள் சொன்னாள் எனக்கு தெரியாது என்று. இது உண்மையாகவே நடந்த சம்பவம். ஆனால் "நீ யார் ரசிகன்" என்று கேட்டவுடன், "நான் விஜய் ரசிகை" என்று பதிலளித்தாள். ரசிகன் என்றவுடனேயே இலக்கிய வாதிகளையும், அறிஞர்களையும், விஞ்ஞானிகளையும் வாழ்வின் அடிநிலையிலிருந்து உயர்ந்தவர்களையும் ஞாபகத்திற்கு வராமல் அவளுக்கு சினிமா தான் ஞாபகத்திற்கு வருகிறது.

நம் நாட்டில் இளைஞர்களின் உண்மை நிலையை குறிப்பிடுகிறேன். இந்தியாவில் இணையதள தேடல்களில் 5ல் 1 தேடல், பாலியல் சம்பந்தப்பட்ட தேடலாய் உள்ளது. எத்தனையோ தலைப்புகள் இருக்க, பாலியல் என்பதை மிஞ்ச எந்தச்

சொல்லும் அதன் 1% கூட தொட்டது கிடையாது. இதை வெளியிட்டது இணையதள சர்வே நிறுவனம்.

கோவில் திருவிழா, விளையாட்டுப் போட்டிகள், கட்சி விசயங்கள் இன்னும் பல விசயங்களுக்காக நம் நாட்டு இளைஞர்கள் வீடு வீடாக சென்று 50ரூ, 100ரூ, 10ரூ என வசூலித்து பகுதியை செலவிட்டு, பகுதியை தங்கள் செலவுக்கு எடுத்துக் கொள்கிறார்கள். ஆனால் தெருவிளக்கு எரியவில்லை. சாலை குண்டும் குழியுமாக இருக்கிறது. குப்பைகள் தேங்கிக் கிடக்கின்றன. கொசுக்கள் அதிகமாகிவிட்டன. சிறு பாலம் இல்லை போன்ற அத்தியாவசியப் பிரச்சனைகளைப் போக்க அரசாங்கத்தை பல மாதங்கள் கெஞ்ச வேண்டியுள்ளது. அல்லது திட்டித் தீர்க்கும் இளைஞர்களின் கூட்டம் அதிகம். ஆனால் நான் மேலே குறிப்பிட்டது போல இத்தேவைகளுக்காகக் களத்தில் இறங்குவதில்லை.

அரசு பள்ளி, கல்லூரிகளுக்கு நிதி வசூலித்துக் கொடுத்தால் அரசுப்பள்ளிகள் உலகத் தரத்திற்கு மாற்றிவிடலாம். ஆனால் இதையெல்லாம் செய்யாமல் ஒன்றுக்கும் உதவாதவனவற்றை நம் இளைஞர்கள் செய்து கொண்டு இருக்கின்றனர்.

இளைஞர்கள் பொறுப்புடனும், கடமை உணர்வுடனும், அதிகபட்ச அக்கறையுடனும் நாட்டின் முன்னேற்றத்திற்குரியவைகளைச் செய்து, இன்னும் 10 வருடங்களுக்குள்ளாக, இந்தியா வல்லரசு நாடாக மாற்ற உறுதியேற்போம்.



**J.Gokilavani**
III B.Sc (CS)



**Nandha Kumar.A**
II B.Sc (Physics)



# MAHATMA GANDHI

**M.Priyanka**
II B.Sc (CS)

Indian nationalist leader Mohandas Karamchand Gandhi, More commonly Known as Mahatma Gandhi was born on October 2, 1869 in Porbandar in Gujarat State.

At the age of 19, Mohandas left home to study in law in london at the inner Temple, one of the city's four law colleges. After returning to india in mid - 1891, he set up a law practice in Bombay, but met with little success. He soon accepted a position with an Indian firm that sent him to its office in South Africa. Along with his wife, Kasturibai and their children, Gandhi remained in south Africa for nearby 20 years.

**Struggle for Indian Independence (1915 - 1947)**

Gandhi took leadership of the congress in 1920 and began escalating demands until on 26 january 1930 the Indian national congress declared the independence of India. The British did not recognize the declaration but negotiations ensured, with the congress with draw their support of the Raj when the viceroy declared was on Germany in september 1939 without consultation. Tensions escalated until Gandhi demanded immediate independence in 1942 and the British responded by imprisoning him and tens of thousands of congress leaders. In august 1947 the British partitioned the land with India and Pakistan each achieving independence on terms that Gandhi disapproved.

**Role in world war 1 :**

In April 1918, during the letter part of world war 1, the viceroy invited Gandhi to a was conference in Delhi. Perhaps to show his support for the empire and help his case for India's independence. Gandhi agreed to activity recruit Indians for the war effort. In contrast to the Zulu was of 1906 and the outbreak of would war in 1914, when he recruited volunteers for the Ambulance corps, this time Gandhi attempted to recruit combatants. In a June 1918 leaf let entitled "Appeal for Enlistment" Gandhi wrote "To bring about such a state of things we should have the ability to defend ourselves, that is, The ability to bear arms and to use them... If we want to learn the use of arms with the greatest possible despatch, it is our duty to enlist ourselves in the army.

**Conclusion :**

Gandhi known for leadership of Indian Independence Movement, Philosophy of Satyagraha, Ahimsa or Non Violence, Pacist. He was death January 30 1948 (aged 78) New Delhi, Delhi, India. He is a father of our nation.

## குணம்

உன்னுடன் அனுதினமும் இருப்பவர்கள்
சினத்துடன் இருக்கிறார்கள் - என்று
கவலைப்படுவது பயன் அற்றது - ஏன்
என்றால் அச்சினத்திலும் - ஒரு
குணம் இருப்பது அவர்களுடன் - கூட
இருப்பவர்களிடம் மட்டுமே தெரியும்!!!

## ஆசிரியர் உறவு

இந்த உலகத்திற்கு குழந்தைகளை
அடையாளம் காட்டியவர்கள்
பெற்றோர்களின் உறவுதான் - ஆனால்
அந்தக் குழந்தைகளை ஒரு
சாதனையாளர்களாக இந்தப் பாரத
நாட்டிற்கு அடையாளம் காட்டிய
மற்றொரு உறவு தான் ஆசிரியர் உறவு...

## இராணுவம்

முப்படையின் முதற்படையே!!!
தேசத்திற்காகவும், மக்களுக்காகவும்
தன் உயிரைத் தியாகம் செய்யும் - தலைப்படையினரே
தனக்கென வாழாமல் தேசத்திற்காக வாழும்
உங்களை என்றென்றும் உங்களின்
தியாகத்தைக் கண்டு இந்த நாடே!
தலை வணங்குமையா!!!
ஜெய்ஹிந்த்!! ஜெய்ஹிந்த்!! ஜெய்ஹிந்த்!!

## அன்பு

அன்பு என்பது மூன்று
எழுத்து தான் - ஆனால்
அது சில பேருக்கு வார்த்தை!!
அதுவே சில பேருக்கு வாழ்க்கை!!!
சிலரை துன்பப்பட வைப்பதும்!!!
மகிழ்ச்சியடையச் செய்வதும் - பலரை
வாழவைப்பதும் அன்புதான்!!!


## ஆசிரியர் உறவு

உன் அருகில் இருக்கும் இதயங்கள்
உன் மேல் அன்பாக இருப்பதில்லை - ஆனால்
உன் மேல் அன்பாக இருக்கும் இதயங்கள்
உன் அருகில் இருப்பதில்லை


## APJ அப்துல் கலாம்

உலகம் போற்றும் உத்தமரே!
மக்களின் மனதில் நின்றவரே!
ஆசிரியர்களின் சகோதரரே!
மாணவர்களின் வழிகாட்டியே!
விண்ணை ஆள சென்றாயோ?
மீண்டும் மண்ணில் பிறப்பாயோ!


**D.THENMOZHI** II B.Sc (CS)




**R.Ezhilarasan** I BCA




**R.Kalyani** II BCA



# தொழில்நுட்ப உரிமைகளும் தொழில்நுட்பத்தை முறையாகப் பயன்படுத்துதலும்

Tmt. **B.Hemalatha**
Asst. Prof & Head,
Dept of Computer Science

இன்றைய வாழ்க்கைச் சூழலில், நம்முடைய அன்றாட பயன்பாட்டிற்கு தொழில் நுட்பம் மிகவும் உதவுகிறது. தகவல் பரிமாற்றம், வணிகப்பயன்பாடு, பொழுதுபோக்கு, மருத்துவம், விவசாயம், கல்வி தொழிற்சாலைகள், வாகன உற்பத்தி, கட்டடக்கலை, விண்வெளி என அதன் பயன்பாடு ஆழ்ந்து அகன்று வேரூன்றி நிற்கிறது. இதன்மூலம் நமக்கு நேரம், பொருட்செலவு, ஆற்றல் செலவு அனைத்தும் குறைகிறது. நாம் எண்ணும் எண்ணங்களை செயல்படுத்த சில நொடிகளே போதுமானதாய் உள்ளது. அதிவேகப் போக்குவரத்துகளால் நமது நேரம் உடல் சிரமம் அனைத்தும் குறைகிறது. ஆனால், இருந்தும், எங்கோ ஒரு இடைவெளி... மனிதகுல நல்வாழ்க்கைக்கும், தற்போது நிலவும் சூழலுக்கும் இடையே ஒரு பெரும் தடையாக உள்ளது. நாம் இழந்தது நிறைய! இன்னும் இழக்கப்போவது நிறைய! செல்போன் டவர்களால் சிட்டுக்குருவிகளை இழந்தோம்! பட்டாசு சத்தத்திற்கு பெயர் தெரியாத பல பறவைகளை இழந்தோம். யானைகளின் வாழ்விடத்தை அழித்து நமக்கு வாழ்விடம் அமைத்துக் கொண்டோம். நாளேடுகளில் யானைகள் உணவு, நீரின்றி இறந்த செய்தியை செய்தியாக மட்டுமே படித்தோம். சுயத்தை மீட்க நம் சுயநலத்தை விடவேண்டும். நாம் உண்ணும் உணவு ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் வயிறு கொள்ளாது என்பதால் மட்டுமே அளவோடு நிறுத்துகிறோம். மற்றனைத்திலும் எல்லை தாண்டிப் போவதையே வழக்கமாகக் கொண்டோம். வாகனப் போக்குவரத்து, வழித்தடம் அனைத்திலும் தொழில்நுட்பத்தைப் புகுத்தி, நமது நேரம் ஆற்றல் அனைத்தையும் சேமித்தோம். சேமித்த ஆற்றலையும் நேரத்தையும் என்ன செய்தோம்? என்பதே இக்கட்டுரையின் கேள்வி.

எந்தத் தொழில்நுட்பத்தின் உதவியுடன் நமது நேரத்தையும் ஆற்றலையும் மீதப்படுத்தினாமோ, அதிலேயே நாம் அளவு கடந்து நமது ஆற்றலையும் நேரத்தையும் செலவு செய்கிறோம். பொழுதுபோக்கு என்பதாக மட்டும் அல்லாமல், நமது பொழுதுகளை ஆக்கத்திற்காக பயன்படுத்தும் நேரம் வந்துவிட்டது.

"அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர்" - என்பது வான்புகழ் கொண்ட திருவள்ளுவரின் வாக்கு!

ஒன்று செய்தால் பின் விளைவு என்பது அறிந்து செயல்படுவோர் அறிவுடையோர் அவ்வாறு பின் விளைவு நோக்காது ஒரு செயலை மேற்கொள்வோர் அறிவுடையோர் அல்லர் என்பதாம். எதனையும் முன் பின் ஆராய்ந்தே செயல்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. நாம் அறிவுடையவர்கள்! ஆறாவது அறிவுடையவர்கள் அதையும் தாண்டி ஏழாம் அறிவும் சிந்திக்கப் பெற்றவர்கள். இயற்கையை பாதிக்கும் எந்த ஒரு தொழில்நுட்பமும் மற்ற நாடுகளில் தடைசெய்யப்படுகிறது. ஆனால் நாம் அதை வளர விடுகிறோம். மீத்தேன் வாயுவிற்கு விளைநிலங்களை, நெற்களஞ்சியங்களை இழக்கிறோம். நாம் வல்லவர்களா? - வல்லரசர்களா? வல்லசுரர்களா?

"பாதகம் செய்பவரைக் கண்டால், நீ பயங்கொள்ளலாகாது பாப்பா
மோதி மிதித்துவிடு பாப்பா! அவர் முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா!
பாரதியின் பாட்டு.. பாப்பாவிற்கு மட்டுமல்ல! நமக்கும் தான்!

சிந்திப்போம்! செயல்படுவோம்! இயற்கையை மீட்டெடுப்போம்...
தொழில்நுட்பத்தை முறையாகப் பயன்படுத்துவோம்!

# நாட்டு நலப்பணித்திட்டம் (NSS)




நிலவேம்புக்கசாயம் முகாம்




இரத்தப் பரிசோதனை முகாம்



வலசை போகும் பறவைகளை கணக்கீடு செய்தல்



மேதகு முன்னாள் குடியரசுத்தலைவர் Dr.A.P.J.அப்துல் கலாம் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கல்லூரி வளாகத்தில் பூஞ்செடி நடும் விழா




சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்




நம் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்களின் செயல்பாட்டை பாராட்டி கடலோர A.D.G.P உயர்திரு சைலேந்திரபாபு I.P.S அவர்கள் கேடயம் வழங்கினார்.





போலல்யோ சொட்டு மருந்து முகாம்




பாரத பிரதமரின் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் கல்லூரி வளாகம் சுத்தம் செய்யப்பட்டது.




செயற்கைக் குளம்



கல்லூரியின் தூய்மை நம் பெருமை!



கலாம் கனவுப் பூங்கா



நாட்டு நலப்பணித்திட்ட சிறப்பு முகாம்
கருமாபாளையம் கிராமம், அவினாசி வட்டம்











# CHIKKANNA GOVERNMENT ARTS COLLEGE


(Affiliated to Bharathiar University, Coimbatore)
Re-accredited with B Grade by NAAC

College Road, Tiruppur 641602, Tamilnadu.
Phone : 0421 - 2242152 Fax : 0421 - 2246600
E-mail : principal@cgac.in Web : www.cgac.in